

ஏ.ஜே.கனகரத்தினா நினைவுரை இல. 2

# சுதேசநாட்டியம் பத்திரிகையும் கல்லடி வேலனும் (1902-1915)

**சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர் வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

23.12.2008 புவியியற்துறை மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# முன்னுரை

ஏ.ஜே. என்ற அந்த நல்ல மனிதன் நம்மை விட்டுப் பிரிந்து இரண்டு ஆண்டுகள் கடந்தோடி விட்டன. ஆனால், அவருடன் பழகிய நினைவுகள் மட்டும் இன்னமும் பசுமையாய் இருக்கின்றது. அவர் இன்னும் கொஞ்சக் காலம் வாழ்ந்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே என்று அடிக்கடி எண்ணத் தோன்றுகிறது. அவருடைய புலமைக்கும், ஆளுமைக்கும் அப்பால், ஒரு நல்ல மனிதனாக வாழ்ந்து சென்ற அவரை வருடத்தில் ஒரு முறையாவது நினைத்துப் பார்க்கும் வகையில் ஒரு நிகழ்வை நடத்த வேண்டும் என எண்ணினோம். அவர் மறைவடைந்த நாளில் இந்நிகழ்வை நிகழ்த்துவதற்கு பெரிதும் விரும்பினோமெனினும், தவிர்க்க முடியாத காரணங்களால் அது கை கூடவில்லை. ஆயினும் இன்றைய தினத்தில் அந்த நிகழ்வு நடப்பது எல்லோருக்கும் மன நிறைவை ஏற்படுத்தும் எனக் கருதுகிறேன்.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கும், நினைவு அஞ்சலியுரையை வழங்குவதற்கும் முழு மனதுடன் முன்வந்தவரும் எமது பல்கலைக்கழக துணைவேந்தரும், ஏ.ஜே. மீது அன்பு கொண்டவருமான பேராசிரியர் நா.சண்முகலிங்கம் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்.

ஏ.ஜே. பற்றிய எண்ணங்களும், அவரது பாதிப்புக்களும் எல்லை கடந்த தன்மை கொண்டது. புலம் பெயர்ந்து வாழும் யாழ்ப்பாணத்தமிழ் மக்கள் மத்தியில் இருந்து ஏ.ஜே. பற்றிய பல ஞாபகப் பிரசுரங்கள் வெளிவந்துள்ளன. அண்மையில், **"A.J.: The Rooted Cosmopolitan"** என்ற ஏ.ஜே. ஞாபகார்த்த சிறப்பு நூலை, திரு. பத்மநாப ஐயர் லண்டனிலிருந்து, அனுப்பி வைத்தார். ஏ.ஜே. யின் நினைவுரையுடன், அவர் அனுப்பிய நூலையும் அறிமுகம் செய்து வைக்காலம் என்று தோன்றியது. ஏ.ஜே. மீது அதிக மரியாதையும், அதிக அன்பும் கொண்ட திருமதி சாந்தி, விக்னராஜா அவர்களிடம் கேட்ட போது, மிகவும் உற்சாகத்துடன் 'நிச்சயம் செய்கிறேன்' என நிறைந்த மனதுடன் ஒப்புக் கொண்டார். அவருக்கு எனது நன்றி உரியதாகும்.

ஏ.ஜே. ஒரு சிறந்த ஆங்கில – தமிழ், இலக்கிய விமர்சகராகவும், மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தார். நீண்ட காலம் பத்திரிகைகளில் பணியாற்றியவர். ஏ.ஜே.யைத் தம்குடும்ப அங்கத்தினராகக் கருதுகின்ற, திருமதி சோமேசசுந்தரி, கிருஷ்ணகுமாரை நினைவுரையை நிகழ்த்துவதற்குக் கேட்ட போது, 'அது தனக்குக் கிடைத்த பாக்கியம்' எனக்கூறி உடன்பட்டார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இருக்கின்றார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப கால யாழ்ப்பாணத்தின் சமூக வரலாறு பற்றிய சில ஆய்வுரைகளை எழுதியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளிவந்த **சுதேச நாட்டியம்** பத்திரிகை பற்றிய இந்த நினைவுரை, எமது பிரதேசத்தின்,சுதேச மொழிப் பத்திரிகைத்துறையின் ஆரம்ப கட்டம் பற்றிய ஒரு விளக்கத்தினை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கிறேன். நூறு ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த பத்திரிகைகள் எவ்வாறிருந்தன என்பதையும், அக்காலத்தில் யாழ்ப்பாண மக்கள் எதையெல்லாம் வாசித்தார்கள், எவற்றை விரும்பினார்கள், எதையெல்லாம் எழுதினார்கள் என்பதை அறியும் போது ஒரு வித வியப்பு ஏற்படுகிறது. சுதேச நாட்டியம் பத்திரிகை பற்றியும், அதன் ஆசிரியரான 'கல்லடி வேலன்' எனப் பலராலும் அறியப்பட்ட கல்லடி வேலுப்பிள்ளை அவர்களைப் பற்றியும் விபரிக்கின்ற இந்நினைவுரை, பலருக்கும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதுகின்றேன். ஏ.ஜே.க்கு மிகவும் பிடித்தமான, பத்திரிகைத்துறை சார்ந்த உரையினைத் தெரிவு செய்து அதனைத் தயாரித்து வழங்கியமைக்காக, திருமதி கிருஷ்ணகுமார் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை மட்டுமன்றி, ஏ.ஜே.யின் நினைவு நிகழ்வினைப் பல வகையிலும் சிறப்புற நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்ல இதயங்கட்கும், இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும் எனது மனம்கனிந்த நன்றிகள்.

பேராசிரியர் இரா.சிவசந்திரன்
தலைவர், சமூகவியற்றுறை
யாழ் .பல்கலைக்கழகம்.
23.12.2008

# அறிமுகம்

பத்திரிகைத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட, புத்திஜீவியான ஏ.ஜே. கனகரத்தினா அவர்களுக்கு உவப்பான ஒரு தலைப்பினை திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் அவர்கள் தேர்ந்தெடுத்து நினைவுரையாக நிகழ்த்துவது பாராட்டிற்குரியது.

19ஆம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் இருந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை ஏறத்தாழ இருபத்தைந்து தமிழ்ப்பத்திரிகைகள் ஈழத்திலே வெளிவந்தன எனக் கூறப்படுகின்றது. இவற்றிலே யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இருந்து வெளிவந்த பத்திரிகைகளே அதிகம் எனலாம்.

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் பற்றிய ஆய்வினைச் செய்தவர்கள் நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வெளிவந்த சுதேச நாட்டியம் என்ற பத்திரிகைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததாகத் தெரியவில்லை. அத்துடன் ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பற்றிய ஆய்வினைச் செய்தவர்களும் கல்லடி வேலுப்பிள்ளை பற்றிய விரிவான ஆய்வினைச் செய்ததாகத் தெரியவில்லை.

இந்த வகையிலே, வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், திருமதி சோமேசசுந்தரி அவர்கள் சுதேச நாட்டியம் பற்றியும், கல்லடி வேலன் பற்றியும் நிகழ்த்தும் நினைவுரைக்கு வரலாற்று முக்கியத்துவம் உண்டு.

யாழ்ப்பாணச் சமூகத்தை நன்கு விளங்கிக் கொண்டு அவர் இந்த ஆய்வினை மேற்கொண்டுள்ளார். கல்லடி வேலன் பற்றிய செவிவழிக்கதைகள் பல நம்மத்தியில் நிலவுகின்றன. ஆவை யாவும் உண்மை என்பதற்கான ஆதாரங்கள் எவையும் இல்லையெனலாம். எனினும், அவர் வாழ்ந்த காலத்தில் எல்லோராலும் அறியப்பட்ட, பேசப்பட்ட ஒரு புலமையாளராக இருந்தார் என்பதும் மறுப்பதற்கில்லை.

ஈழத்துத் தமிழ் அறிஞர்களிலே பல் பரிமாண ஆளுமை மிக்க கல்லடி வேலன் பற்றியும், அவரது படைப்புக்கள் பற்றியும், சுதேச நாட்டியம் பற்றியும் ஆய்வு செய்யப் போகும் இனி வரும் ஆய்வாளர்களுக்கு பாதை திறந்த பான்மையாக இந்நினைவுரை அமையும்.

அரிய தகவல்களைத்தேடித் தொகுத்து பிராரம்ப உசாவலாக நினைவுரையாற்றும் திருமதி சோ.கிருஷ்ணகுமாரின் ஆய்வுப்பணி தொடர்வதாக.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா
தலைவர்,தமிழ்த்துறை
யாழ் பல்கலைக்கழகம்
23.12.2008

# சுதேசநாட்டியம் பத்திரிகையும் (1902 -1915) கல்லடி வேலனும்

சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்

எனது ஆசிரியராகவும், எங்கள் குடும்பத்தில் ஓர் அங்கத்தவராகவும் இருந்து, அமரத்துவம் அடைந்த திரு. ஏ. ஜே. கனகரத்தினா அவர்களின் நினைவுரையினை உங்கள் முன் நிகழ்த்துவதில், நான் பெரும் பாக்கியம் பெற்றிருப்பதாக உணர்கின்றேன்.

ஏ.ஜே. கனகரத்தினா அவர்கள், ஆங்கிலம் அரச கரும மொழியாகக் கொலுவிருந்த காலத்தில், ஆங்கில மொழி வீட்டு மொழியாகப் பேசப்பட்ட சூழலில் பிறந்து வளர்ந்தவர். ஆரம்ப, இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடம், சென். பற்றிக்ஸ் கல்லூரி, கொழும்பு சென்.ஜோசப் கல்லூரி, ஆகியவற்றில் பயின்றவர்.

அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாகப் பயின்று பட்டம் பெற்ற பின்னர், சென். பற்றிக்ஸ் கல்லூரி, மகாஜனக் கல்லூரி, திருக்கோவில் தம்பிலுவில் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில், ஆங்கிலம் உட்பட ஏனைய கலைப்பாடங்களையும் கற்பித்தவர். யாழ்ப்பாண வளாகம் (பின்னர் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமாக உயர்த்தப்பட்டது) ஆரம்பித்த காலம் முதல் இளைப்பாறும்வரை, ஆங்கிலப் போதனாசிரியராகக் கடமையாற்றியவர். தொழில் ரீதியாக ஆசிரியராக இருந்தாலும், இவரது ஆளுமை பல்வகைப்பட்டது.

ஆரம்பத்தில் Ceylon Daily News, Co-operator ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவிலும், பின்னர் Saturday Review ஆசிரியர் குழுவிலும் பணி புரிந்தவர். ஆங்கில மொழி, இலக்கியம், விமர்சனம் ஆகிய விடயங்களில் மிகுந்த ஆளுமைமிக்கவராக இருந்த ஏ.ஜே.யை, தமிழ் இலக்கியம், தமிழ்ப்பத்திரிகை, தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புகள் போன்ற துறைகளில், கனதியான பங்களிப்பும்,செய்தவர். தமிழ் மீது அபிமானம் கொள்வதற்கு அடித்தளமாக, 1956ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட 'தனிச்சிங்களச் சட்டம்' அமைந்தது. தனது முதலாவது வெளியீடான **மத்து** என்ற நூலை ஏ.ஜே. 'தனிச்சிங்களச் சட்டத்திற்கே' சமர்ப்பணம் செய்திருந்தார்.

தன்னை எப்போதும் முன்னிறுத்தாத முதிர்ச்சியைக் கொண்ட ஏ.ஜே., இலங்கையின் சமகால ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு கொண்டவராகவும், பங்களிப்புச் செய்தவராகவும் இருந்து வந்துள்ளார். இவரது பத்திரிகை வாழ்வில் அறியப்பட்ட செய்திகளை விட அறியப்படாத செய்திகளும் பல உண்டு. **இளம்பிறை, ஐக்கிய தீபம், மல்லிகை, அலை, திசை** போன்ற தமிழ்ச் சஞ்சிகைகளில் ஏ.ஜே.யின் பங்கு இங்கு நினைவு கூரத்தக்கது. எந்த முகஸ்துதிக்கும் சோரம் போகாது, தான் சொல்ல நினைத்ததைச் சொல்லும் வல்லமையும், உறுதியும் உடையவர். ஒரு ஆசிரியராகப் பணியாற்றினாலும், பத்திரிகைத்துறையே அவருக்கு விருப்பமான துறையாக இருந்தது. அவர் எப்பொழுதும் தன்னைப்பற்றிக் கூறும் பொழுது, 'முதலில் நான் ஒரு பத்திரிகையாளன்' என்றே கூறுவார்.

சிறந்த புலமையாளராகவும், இலக்கியவாதியாகவும், இலக்கிய விமர்சகராகவும் இருந்து வந்தபொழுதும், பத்திரிகையாளன் எனத் தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதில் அதிக விருப்புக் கொண்ட ஏ. ஜேயின் நினைவுரை, பத்திரிகை சார்ந்ததாக இருப்பது நன்றெனக்கருதியதால்,அத்தகைய ஒரு தலைப்பினைத் தெரிவு செய்ய வேண்டியதாயிற்று. யாழ்ப்பாணத்தில் 1902ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வெளியிடப்பட்டு வந்திருந்ததும், இதுவரை எவராலும் ஆய்வு செய்யப்படாததுமான பிரபல தமிழ்ப்பத்திரிகை ஒன்றின் ஆரம்பகட்டம் பற்றியதாகவே இவ்வுரை அமைகிறது.

## பகுதி 1

### கல்லடிவேலனின் 'சுதேசநாட்டியம்' பத்திரிகை

யாழ்ப்பாணச் சமூகத்தின் வரலாறு பற்றி அறிந்துகொள்ள முற்பட்ட எனது முயற்சியில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெளியிடப்பட்டு வந்த பத்திரிகைகளையும் அகழ்ந்து பார்க்க வேண்டிய ஆர்வமும், அவசியமும் ஏற்பட்டது. இதன்போது, 'கல்லடி வேலன்' ஆல் 1902ஆம் ஆண்டு முதல் வெளியிடப்பட்டு வந்த **'சுதேச நாட்டியம்'** என்ற பத்திரிகையிலிருந்து, யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய பல்வேறு முக்கிய விடயங்களை அறிய முடிந்தது. அதிலும், உயர்ந்தோர் மாட்டல்லாத சாதாரண மக்கள் வரலாறு பற்றிய தகவல் தேட்டத்தில், மேற்படி பத்திரிகை ஒரு முக்கியமான தகவல் பெட்டகமாக விளங்குவதை இனம் காண முடிந்தது.

கல்லடி வேலனால் வெளியிடப்பட்டு வந்த **'சுதேசநாட்டியம்'** பத்திரிகையானது தனி நபரால் நடாத்தப்பட்டு வந்தவொரு பத்திரிகையாக இருந்ததுடன், யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்வேறு விடயங்களைப் பிரதிபலிப்பதாகவும் இருந்து வந்துள்ளது. மேலும், இப்பத்திரிகையானது கல்லடிவேலனால் 1902ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அவர் இறந்த பின்னரும் சிறிது காலமாவது (1947ஆம் ஆண்டுவரையும்) வெளியிடப்பட்டுள்ளது. **'சுதேச நாட்டியம்'** பத்திரிகையானது 45ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்தமையானது, யாழ்ப்பாணத்தின் தமிழ்ப் பத்திரிகைத் துறை வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சாதனை என மதிப்பிடக்கூடியதாகும். அவ்வாறான போதிலும், யாழ்ப்பாணத்தின் பத்திரிகைகள் பற்றி ஆராய்ந்தவர்கள், **'சுதேச நாட்டியம்'** பத்திரிகையில் வந்த விடயங்களைக் கவனிக்கத் தவறியுள்ளனர். அப்பத்திரிகை பற்றியோ, கல்லடி வேலன் பற்றியோ ஆய்வுக்கட்டுரை ஏதேனும் எழுதப்பட்டு வெளியிடப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை.

**'கல்லடி வேலன்'** எனப் பொதுவாக அழைக்கப்பட்ட கந்தப்பிள்ளை **வேலுப்பிள்ளை,** வயாவிளான் என்னுமிடத்தைச் சேர்ந்தவர். இவர் **'ஆசுகவி'** எனவும் அறியப்பட்டிருந்தார். நினைத்தவுடன் கவிபாடும் வல்லமை கொண்டமை காரணமாகவே 'ஆசுகவி' என அழைக்கப்பட்டார். இரண்டு தலைமுறைகளுக்கு முற்பட்டவர்களால் அவருடைய சிலேடைத்தனமான நடவடிக்கைகள் சுவையுடன் பேசப்படுவதையும் கேட்டுள்ளேன். எழுதிய சில கவிதைகளை நான் வாய்மொழியாகக் கேட்டிருந்தேன்.

கல்லடிவேலன் **'அழகம்மா கும்மி,' 'இரகசிய நூல்'** ஆகிய நூல்களையும், **'யாழ்ப்பாண வைபவ கௌமுதி'** (1921) என்ற வரலாற்று நூலையும் வெளியிட்டிருந்தார். முன்னைய இரு நூல்களும் கிடைப்பதற்கு அரியனவாயுள்ளன. இவைகளைவிட, உறுதியாக நிரூபணமாகாத, அல்லது எழுதியவர் பற்றிய விபரங்களற்ற வகையில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டுள்ள, பல நூல்களுள், சிலவற்றையும் இவர்தான் இயற்றியிருந்தார் எனக் கருதப்படுகிறது. இவரது பத்திரிகையில் வெளிவந்தவைகளும், இவரது நூல்களும், இவர் நீதி

விசாரணைகளை எதிர்கொள்ளவும், தண்டப்பணம் செலுத்தவும், சிறைத் தண்டனை பெறவும், ஏதுவாக அமைந்த காரணத்தினால், அவரது நூல்கள், இயற்றியவரது பெயர் குறிப்பிடப்படாது, அல்லது வேறு பெயர்களில் வெளியிடப்பட்டிருக்கக்கூடும்.

## பகுதி 2

### யாழ்ப்பாணத்தில் அச்சுக்கலையின் அறிமுகமும், பத்திரிகைகளின் பெருக்கமும்

அச்சுக்கலையின் அடிப்படை பிரதியெடுத்தலாகும். அதன் தொடக்கத்தினை இந்திய மொகெஞ்தாரோ -ஹரப்பா நாகரிக கால முத்திரைகளுடன் தொடர்பு படுத்தி நோக்குவர். (Priolkar,1958:1) பிரதியெடுக்கும் கலை முதலில் வளர்ந்த நாடு சீனாவாகும். கி. பி. 105 இல் சீனாவில் காகிதம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. கி. பி. முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம்நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் சீனர்கள் மரப்படிமங்களில் எழுத்துக்களையும் தெய்வப்படங்களையும்செதுக்கி மையைக் கொண்டு காகிதத்தில் பிரதி எடுக்கும் நிலையை அடைந்து விட்டனர்.

இதனை விட களிமண், மரம் போன்றவற்றில் அச்சுக்களை உருவாக்கியும் பயன்படுத்தியுமிருந்தனர். சீனர்கள் அறிந்த காகிதத் தொழில்நுட்பம் கி பி 12இல் அராபியர் வாயிலாக ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டது. (Priolkar,1958 :1)

ஜொகான் குட்டன்பேர்க் 1445இல் முதன் முதலாக பைபிளின் பாகத்தை மிருகத்தோலில் அச்சிட்டு நிறைவேற்றியமையானது நவீன அச்சுக்கலையின் ஆரம்பத்தில் ஒருமுக்கியமான சகாப்தத்தினை ஆரம்பித்திருந்தது. (Priolkar,1958:1) ஐரோப்பாவில் அச்சுக்கலையின் அறிமுகம் புரட்சிகரமான மாற்றங்களுக்கு வழிவகுத்தது. அச்சுக்கலை அறிவை வளர்ப்பதிலும், கருத்துக்களைப் பரப்புவதிலும், வாசிக்கக்கூடியவர்களின் சிந்தனையைத் தூண்டுவதிலும், அபிப்பிராயங்களை ஏற்படுத்துவதிலும் ஆற்றக்கூடிய பங்களிப்பு, எவரும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதே.

கீழைத்தேசங்களில் அறிவு நாட்டமும் அறிவுப் பசியும் அதிகமாக இருந்ததென்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயம். அச்சுக்கலையின் அறிமுகம் இங்கு வருவதற்கு இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பே அதெனியர்களைப் (புராதன கிரேக்க நாகரிக காலத்தில் வாழந்த அதென்ஸ் நகரத்தினர்) போன்று, இவர்களும் எதையும் அறிந்து கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், அறிவைப் பரப்புவதில் தேர்ச்சி பெற்றவர்கள் நகர்ப் புறங்களில் வேண்டிய போதும், மிகவும் தொடர்புகள் குறைந்த கிராமப் புறங்களிலும் தொடர்ந்து இத்தகைய வழிமுறையைப் பின்பற்றி வந்தனர் எனவும் டிக்பி குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கத் தக்கது.(Digby,1875:5)

தமிழில் அச்சுக்கலையின் ஆரம்பம் பற்றிய தகவல்கள் கவனத்தை ஈர்ப்பனவாகவே உள்ளன. இந்தியாவிலேயே முதல் முதல் அச்சுவாகனத்தை அலங்கரித்த மொழியாக தமிழ் விளங்கியுள்ளது. தமிழ் எழுத்துக்களுக்கு அச்சு வடிவத்தை முதன் முதலில் ஆக்கிக் காட்டியவர்கள் டேனிஷ் மதகுருமார்களே. (Priolkar,1958:11 )

அச்சுக்கலை அறிமுகப்படுத்தப்பட்டபோது, முதலில் பழைய நூல்களும், துண்டுப்பிரசுரங்களுமே அச்சிட்டு வெளியாக்கப்பட்டன. பாரம்பரிய எழுது கருவிகளுக்குப் பழக்கப்பட்ட சமூகத்தவர்கள் மத்தியில், இப்புதிய முறை உடனடியாக வாசிக்கும் பழக்கத்தை தூண்டக்கூடியதாக இருக்கவில்லை. மக்கள் அவற்றை வெறுப்புடனேயே பார்த்தனர்.

பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கிய பின்னரே அச்சுப்பதித்த நூல்களையும், துண்டுப்பிரசுரங்களையும் வாசிக்கத் தொடங்கினர். ( Digby,1875:6)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், இந்தியா, இலங்கை ஆகிய பகுதிகளில் பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கின. இப் பத்திரிகைகளை அவை வெளியிடப்பட்ட மொழியை அடிப்படையாகக் கொண்டு, மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1). ஆங்கிலப் பத்திரிகைகள் ( English Papers)

2). ஆங்கில – பிரதேச மொழிப்பத்திரிகைகள் ( Anglo –Vernacular Papers)

3). பிரதேச மொழிப் பத்திரிகைகள் (Vernacular Papers)

1875ஆம் ஆண்டில் இலங்கை, இந்திய பகுதிகளில் 166 ஆங்கிலப் பத்திரிகைகளும், 382 ஆங்கில- பிரதேச மொழிப்பத்திரிகைகளும், பிரதேசமொழிப்பத்திரிகைகளும் வெளியிடப்பட்டிருந்தன. இது பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்காலத்தில், அரச மொழியாக ஆங்கிலம் இருந்த போதிலும், மக்களின் தொடர்பு ஊடகம் என்ற வகையில் பிரதேச மொழிகள் பெற்றிருந்த முக்கிய பங்கினைச் சுட்டிக்காட்டுவதாக உள்ளது. அக்காலத்தில் மிஷனரியாகவும், பத்திரிகையாளனாகவும்,இலங்கையிலும் இந்தியாவிலும் தொழிற்பட்ட வில்லியம் டிக்பி, அக்காலத்தில் இப்பகுதிகளில் வெளிவந்த, பிரதேசம் சார்ந்த பத்திரிகைகளைப் பற்றிய ஆய்வுக் கட்டுரை ஒன்றினை எழுதிவெளியிட்டுள்ளார். (Digby, 1875:1-40) 1875ஆம் ஆண்டில் எழுதப்பட்ட இக்கட்டுரையே பிரதேசம் சார்ந்த பத்திரிகைகள் பற்றி முதன்முதலாக எழுதப்பட்ட கட்டுரையாக இருக்கலாம்.

ஐரோப்பிய காலனித்துவ ஆதிக்கமே அச்சுக்கலையின் உபயோகத்தை இலங்கையருக்கு அறிமுகப்படுத்தியது. அமெரிக்க மிஷனரிமார்கள், கல்வி விருத்தியின் பொருட்டு 1820 இல் அமெரிக்காவிலிருந்து அச்சியந்திரத்தினை வரவழைத்தனர். அதற்கான எழுத்துக்களை இந்தியாவிலிருந்து பெற்றனர். அதற்கு இலங்கை ஆள்பதி தடை விதித்தமை காரணமாக அந்த அச்சியந்திரம் நல்லூர் சேர்ச் மிஷன் சபையினரிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் அந்த இயந்திரத்தின் வழியாக 'முத்தி வழி' என்ற ஆக்கத்தினை வெளியிட்டனர். அந்த அச்சியந்திரம் அமெரிக்க மிஷனரிமார்களால் மீளப் பெறப்பட்டு, 1834ஆம் ஆண்டில் மானிப்பாயில் பதிப்பு வேலைகளுக்காக ஸ்தாபிக்கப்பட்டது. அவர்களே 1841இல் யாழ்ப்பாணத்தில் முதலாவது பத்திரிகை யாக, *'உதய தாரகை'* எனத் தமிழிலும் ***'Morning Star'*** என ஆங்கிலத்திலும் பெயர் கொண்ட இருமொழிப் பத்திரிகையினை வெளியிட்டனர். (வேலுப்பிள்ளை,1984:132, இராசநாயகம்,1934:130). இதுவே யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் துறையின் ஆரம்பமாக அமைந்தது.

1853 இல் **வைமன் கதிரவேற்பிள்ளை** *'வித்தியாதர்ப்பணம்' (Literary Mirror* ) என்ற பத்திரிகையை வெளிப்படுத்தியிருந்தார். 1862ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்திலிருந்து, **கூல்ட்** என்பவர் ***'Jaffna Freeman'*** என்ற ஆங்கிலப் பத்திகையைத் தொடக்கி நடாத்திவந்தார். அப்பத்திரிகை சிறிது காலத்தில் வெளிவராதுபோனது (இராசநாயகம்,1934:17).

1863ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ***'Ceylon Patriot'*** *(இலங்காபிமானி)* என்னும் ஆங்கிலப் பத்திரிகையை, நியாயவாதியான (Advocate) (முன்குறிப்பிட்ட) **வைமன் கதிரைவேற்பிள்ளை** பிரசுரிக்க ஆரம்பித்தார். 1865 ஆம் ஆண்டில் சலோமன் ஜோன்பிள்ளை என்பவர் அப்பத்திரிகைக்குச் சொந்தக்காரனும், ஆசிரியருமானார். அவருக்குப் பின் நியாயதுரந்தரராகிய **ஆ. கதிரவேலு**, அவர் தம்பி **ஆ. கனகரத்தினம்** முதலியோர் அப்பத்திரிகையை நடாத்தி வந்தனர். 1871ஆம் ஆண்டில் **ஹியூஸ் (Hughes)** என்பவரால் ***'Jaffna News'*** என்னும் ஆங்கிலப் பத்திரிகை வெளியிடப்பட்டது. இது சிறிது காலத்தில் வெளிவராது போனது.(Martin, 1922: 218)

1876ஆம் ஆண்டில் ***'சத்திய வேத பாதுகாவலன்'*** எனத்தமிழிலும் ***'Catholic Guardian'*** என ஆங்கிலத்திலும் பெயர் கொண்ட இருமொழிப்பத்திரிகை, கத்தோலிக்க மதம்

சார்ந்த பத்திரிகையாக வெளிவந்தது. (ஜெயசீலன்,1997:155) 1877இல் '*இலங்கை நேசன்' ( 'Lanka Snahan')* பத்திரிகையும், 1880இல் '*சைவ உதய பானு*' எனும் பெயர் கொண்ட பத்திரிகையும், 1881இல் 'சைவசம்போதினி' என்ற கையெழுத்துப் பத்திரிகையும்; 1882இல் '*விஞ்ஞான வர்த்தனி*' என்ற பத்திரிகையும் வெளியிடப்படத் தொடங்கின. 1884ஆம் ஆண்டில் '*சைவாபிமானி*' என்ற பத்திரிகை வல்வை பொ.ஞானசபாபதிப்பிள்ளை என்பவரால் தொடங்கி நடத்தப்பட்டதென அறிய முடிகிறது. (சிவனேசச்செல்வன்,1974:349) 1885 தொடக்கம் '*சன்மார்க்க போதினி*' என்ற பத்திரிகை வெளியிடப்படத் தொடங்கியது. 1889இல் '*இந்து சாதனம்*' வெளியிடப்பட்டது. 1899 ஆம் ஆண்டு வரை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளையும் கொணட் இருமொழிப் பத்திரிகையாகவே இப்பத்திரிகை வெளிவந்தது. (Martin, 1922: 218)

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், யாழ்ப்பாணத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளிவரத் தொடங்கியிருந்தன. அப்பத்திரிகைகளுள், ***திராவிட கோகிலம், சுதேச நாட்டியம், விவேகானந்தன், ஞானசித்தி, இந்து பாலபோதினி ,விஜயபானு, குருசந்திரோதயம், சைவ சூக்குமார்க்க போதினி, விஜயலக்சுமி, மகாவிஜயலச்சுமி, ஆத்மபோதினி, சண்முகநாதன், பால பாஸ்கரன்*** போன்ற பத்திரிகைகளின் சில பிரதிகளையேனும் பெறக்கூடியதாக உள்ளது. பால பாஸ்கரன் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்ட முதலாவது தினசரிப்பத்திரிகை என்ற சிறப்பிற்குரியது. இவற்றுள் '***திராவிட கோகிலம்***', '***விவேகானந்தன்***', ஆகிய பத்திரிகைகள் இருமொழிப்பத்திரிகைகளாக வெளிவந்தவையாகும். மேலும், இக்காலப்பகுதியில் ***கலியுகவரதன், சைவபால்ய சம்போதினி, ஞானப்பிரகாசம், லங்கா*** போன்ற பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருந்தன என்ற தகவலும் அறியக்கிடக்கிறது. பின் சொல்லப்பட்ட பத்திரிகைகள் எவையும் கிடைக்கவில்லை.

## பகுதி 3

### யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கான காரணங்கள்

இக்காலத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளிவந்தமைக்கான காரணங்களை இனங்காண்பதும் அவசியமானதாகும். இதற்குப் பலகாரணிகள் ஏதுவாக அமைந்தன.

1)**அதிக அச்சியந்திரங்களின் வருகை-** பத்தொன்பதாம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்ட அச்சுத் தொழின்முறையே 1910 ஆம் ஆண்டுவரை வழக்கத்தில் இருந்தது. 1921ஆம் ஆண்டில் யாழ்குடாவில் பெரிதும் சிறிதுமாக 12 அச்சுக்கூட்ங்கள் இருந்துள்ளன.(வேலுப்பிள்ளை,க.1921;327) இவை யாழ்ப்பாணத்தில் அச்சுக் கலை பரவலடைந்திருந்ததைக் காட்டும் தரவாக அமைகின்றது.

2)**கல்வி கற்ற வகுப்பினரின் அதிகரிப்பு-** ஒரு சமூகத்தில் கல்வி கற்ற வகுப்பினரின் அதிகரிப்பு பத்திரிகை வாசிப்போரின் எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஒரு முக்கியமான அம்சமாகும். மரபு வழிக்கல்வியின் தொடர்ச்சியும், பாடசாலைகளின் உருவாக்கமும் வாசகர்களை உருவாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனினும் 1910-1911 காலப்பகுதியில் தான் இலங்கையில் கட்டாயக் கல்வி நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. அதன்பின்னர் மிகவும் கூடுதலான வாசகர்கள் தொகை பெருகியிருத்தல் எதிர்பார்க்கக் கூடியதாகும்.

3)**புகையிரதப்பாதை போடப்பட்டமை** - 1905ஆம் ஆண்டிலேயே யாழ்ப்பாணம் - கொழும்பு புகையிரதப்பாதை திறக்கப்பட்டது. அதன் முன்னர் தரைவழியான தொடர்புகளும் கடல் வழியான தொடர்பு சாதனங்களும் பாவனையில் இருந்தன. பெரும்பாலும் கடல் வழிப்பிரயாணமே யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கும், யாழ்ப்பாணத்தில் இருந்து இந்தியப்பகுதிகளுக்கும் செல்வதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. கொழும்புக்குச் செல்வதை விடக் குறைந்த காலத்தில் இந்தியப்பகுதிகளுக்குச் செல்வதும், இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருவதும் இலகுவாக இருந்தது. கடல் வழியாக இந்தியாவில் இருந்து பொருட்களை இலங்கைக்குக் கொண்டு வருவதும் சாத்தியமாக இருந்தது. அச்சுயந்திர சாதனங்களும் இவ்வாறு இந்தியா வழியாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்டமைக்கான நியாயங்களுள்ளன. இது யாழ்ப்பாணத்தில் அச்சுத்தொழில் மேலோங்குவதற்கு வாய்ப்பளித்தது.

4)**இலங்கையின் ஏனைய பகுதிகள், இந்தியா, மலாயா தீபகற்பம், ஆபிரிக்கா என்பவைகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்ற நிலையில் ஏற்பட்ட பணப்புளக்க அதிகரிப்பு**- யாழ்ப்பாணத்தவர்கள் இவ்வாறு யாழ்ப்பாணத்திற்கு வெளியே தொழில் வாய்ப்புப் பெற்றமை பணப்புளக்கம் அதிகரிக்கவும், அப்பகுதிகளில் தங்கி வாழ்கின்றவர்கள் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் விடயங்களை அறிந்து கொள்வதற்கான உதவும் சாதனங்களான பத்திரிகைகள் வளரவும் வாய்ப்பளித்தது. அத்துடன் இத்தகைய பணவருவாய் பெற்றவர்கள் தமது பெருமைகள் பத்திரிகைகளில் வருவதை விரும்பினர். தமது அல்லது தமது குடும்பத்தவர்களின் சுக, துக்கச் செய்திகளை பத்திரிகைகளில் வெளியிடவும் ஆர்வம் காட்டினர். இதன்மூலும் பத்திரிகைகள் வருவாய் பெற்றதோடு, பத்திரிகைகளின் விற்பனையும் அதிகரிப்பதற்கு இடமளித்திருக்கலாம்.

5)**வாசிப்புப் பழக்கம் வளர்ச்சியடைந்தமையும், வாசிப்பின் அவசியம் வேண்டப்பட்டமையும்**- பத்திரிகை வாசிப்பின் தேவை இக்காலத்தில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியிருந்தது. பாடசாலைகளில் நூல்நிலையங்கள் அமைக்கப்பட்டன வாசகர்களுக்கான தனியார் வாசக நிலையங்களும் உருவாக்கப்படத்தொடங்கின. தொழிலாளர்கள் மத்தியிலும் உலகவிடயங்களை அறிந்து கொள்ளும் வகையில் பத்திரிகைகள் வாசிப்பு, வளர்ச்சியடையத்தொடங்கியதென்பது பொதுவான அபிப்பிராயம். பிற்காலத்தில், யாழ்ப்பாணச் சுருட்டுக்கொட்டில்களில் சுருட்டுத் தொழிலாளர்களுக்கு பத்திரிகை வாசிப்பதற்கென்றே ஒருவர் ஏற்பாடு செய்யப்பட்டு, பத்திரிகைகள் வாசித்தல் நடைபெறுவதைப் பலரும் அறிவர். 1900 -1920 காலத்தில் யாழ்ப்பாணத்தில் சுருட்டுத் தொழில் பெரும் தொழிற்றுறையாக வளர்ந்திருந்ததையும், சுருட்டுத் தொழிலாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதையும், வேலைநிறுத்துங்கள் மேற்கொண்டு வெற்றி பெற்றதையும் அறிகிறோம்.*(சு.நா. 20.03.1911)*. தொழிலாளர்களுக்கு அடுத்த படியாக, வசதிமிக்க குடும்பப் பெண்களும் கல்வி வாய்ப்புப் பெற்றிருந்தமை காரணமாக, வீட்டில் இருந்து கொண்டே பல்வேறு விடயங்களை அறிந்து கொள்வதற்காகவும், பொழுது போக்கிற்காகவும் பத்திரிகைள் வாசித்தனர். பத்திரிகைகளில் சமய, இலக்கிய விடயங்கள் மட்டுமன்றி உலகில் இடம் பெறும் முக்கிய விடயங்களும் எழுதப்பட்டு வந்ததால் அவற்றை அறியக் கொடுக்கும் ஒரே தொடர்பு ஊடகமாகப் பத்திரிகைகளே அக்காலத்தில் தொழிற்பட்டன.

6)**பொதுசன அபிப்பிராயத்தின் வெளிப்பாட்டுச் சாதனம்** - சமூகத்தில் கருத்துக்களை நிறுவுவதற்கும் நிராகரிப்பதற்கும் உரிய சாதனமாகப் பத்திரிகைகளே விளங்கின. ஆரம்பத்தில் சமயம் சார்ந்த கருத்துக்களையும், விமர்சனங்களையும் விவாதங்களையும் தாங்கி வந்த பத்திரிகைகள் பின்னர், மொழி சார்ந்த விடயங்களையும், பிற விடயங்களையும் எழுதத் தொடங்கின. அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு

பற்றிய விடயங்களும் இக்காலத்தில் கவனத்திற் கொள்ளப்படுவதாக வரத் தொடங்கியிருந்தது.

1910ஆம் ஆண்டில் வெளி வந்த யாழ்ப்பாணப்பத்திரிகையான விஜயலட்சுமி பத்திரிகையின் தன்மை பற்றிப் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளது.

> 'புதினப்பத்திரம் வாசிப்பவர் அரசினர்க்குத் தாம் செய்ய வேண்டிய கடமைகளையும், தம்சாதியாரின் நிலையையும், பிற சாதியாரின் நிலையையும், அறிகின்றார்கள். புதினப்பத்திரமானது வாசிப்போர்க்கு ஒற்றுமையையும், தேசாபிமானத்தையும், மதாபிமானத்தையும், சாதியபிமானத்தையும், உண்டுபண்ணுகிறது மட்டுமல்லாமல், எமது குறைகளை அரசினர்க்கு விண்ணப்பஞ் செய்யவும் சாதனமாகவிருக்கின்றது. ஓர் சாதியாரின் நாகரீகமானது அச்சாதியாருட் பரவும் வித்தியாசாலை, புதினப்பத்திரம் முதலியவற்றானே நன்கு விளங்கும். ஆராயுமிடத்துப் புதினப்பத்திரமே ஓர் சாதியாரின் நாகரீக விர்த்திக்குப் பெரும்பான்மையும் ஏதுவாயிருக்கிறது....'(***விஜயலட்சுமி,:10.05.1910)***

மேற்படி கூற்றிலிருந்து, அக்காலப் பத்திரிகை ஆசரியர்கள் புதினப்பத்திரிகைகள் பற்றிய அடிப்படையான விடயங்களை, அறிந்து வைத்திருந்ததோடு அதன்படி காரியங்களைச் செய்திருந்தனர் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

சமூக நீதி, நியாயங்கள் , அநீதிகள் தனிநபர்களின் நியாயங்கள், ஒழுங்கீனங்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் சாதனங்களாகவும் பத்திரிகைகள் செயற்பட்டன. அரசாங்கத்தை நேரடியாக விமர்சிக்க முடியாத, அல்லது விமர்சிக்க விரும்பாத இச்சமூகத்தவர்கள், ஆட்சியாளர்களின் கீழ் கடமையாற்றிய உத்தியோகத்தவர்களைத் தமது இறுக்கமான சமூகக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முனைந்தனர். அவர்களின் தன்னிச்சையான போக்கினைத் தடுக்கும் வழிமுறையாகவும் பத்திரிகைகளில எழுதுதல் காணப்பட்டது. அந்த வகையில் பத்திரிகைகள் ஒரு பலமான ஆயுதமாக வளரத் தொடங்கியது. இத்தகைய போக்கு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தென்னிலங்கையிலும், இந்தியாவிலும் காணப்பட்டதையும், அவை காரணமாக பல குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட்டன என்பதையும் டிக்பியும்,("the terror to evil-doers") சுட்டிக் காட்டியுள்ளார். (Digby,1875:9 -10)

7)**அச்சுவேலை ஒரு தொழிற்றுறையாக வளர்ந்தமை** - அச்சு இயந்திரங்களை அமைத்தவர்கள், தமது வியாபாரத்தின் பகுதி நேரக்காரியமாக, பத்திரிகைகளை வெளியிடக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தமை, இத்தகைய பத்திரிகைகளின் வெளியீட்டிற்கு இடமளித்த மற்றுமோர் முக்கிய அம்சமாகும். இக்காலத்தில் கல்வி கற்றுத் தொழில் வாய்ப்புப் பெற்று இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்தவர்களும், வெளிநாடுகளில் சென்று வாழ்ந்தவர்களும் பெற்ற பணவருவாய், அவர்கள் மத்தியில் புதிய கலாசார அடையாளங்களை உருவாக்கவும், தம்மை அந்தஸ்து மிக்கவர்களாகக் காட்டிக் கொள்வதற்கும், அச்சு ஊடகப்பயன்பாடும், பத்திரிகைகளும் அவசியமாயின. இதனால் பல அச்சியந்திர சாலைகள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்தன. அவை இத்தகைய பதிப்பு வேலைகளைச் செய்வதுடன் பத்திரிகைகளையும் அச்சிடுதல் சாத்தியமாயிருந்தது. அச்சியந்திரச் சொந்தக்காரர் கவிஞராகவும் பத்திராதிபராகவும், இலக்கிய கர்த்தாவாகவும், பதிப்பாளராகவும் தொழிற்படக்கூடுமாயிருந்தது. விவாகச் செய்திகளை வெளியிடல், மரண அறிவித்தல்களைப் பதிவு செய்தல்,சமரகவிகள் வெளியிடல், உத்தியோக உயர்வு, உத்தியோக இடமாற்றம் ஆகியவற்றை அறியப்படுத்தல் என்பவற்றிற்குப் பத்திரிகைகள் களமாக அமைந்தன. அது மட்டுமன்றி, திருமண விஞ்ஞாபனப் பத்திரங்கள், கிருகப் பிரவேச விஞ்ஞாபனப் பத்திரங்கள், திருமணப் பாராட்டுப் பத்திரங்கள், தாம்பூலப்பைகள் ஆகியவற்றை அச்சிடும் முறை வழக்கத்திற்கு வந்திருந்தது. இறந்தவர்களின் அந்தியேட்டி

நாளில் கல்வெட்டு அல்லது சமரகவிகள் இயற்றுவித்து அச்சிட்டு வெளியிடும் வழக்கமும் ஆரம்பிக்கப்படடிருந்தது.

## பகுதி 4

### ஆய்வுரையின் தலைப்பும் ஆய்வு பற்றிய விளக்கமும் ஆய்வுரையின் தலைப்பும் ஆய்வு பற்றிய விளக்கமும்

'சுதேசநாட்டியம் பத்திரிகையும் கல்லடி வேலனும் 1902 – 1915' என்ற தலைப்பில், இந்த உரையினைத் தயார் செய்தமையின் நியாயங்கள் சிலவற்றைத் தெளிவு படுத்த வேண்டியுள்ளது. ஒரு பத்திரிகை பற்றிய விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்துவதன் நோக்கம் அக்கால சமூகம் பற்றிய ஒரு பருமட்டான அறிவைப் பெறக்கூடியதாக அமையுமென்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால யாழ்ப்பாணம் பற்றிய விடயங்களை அறிவதற்கு அரசாங்கப் பிரசுரங்கள், மதநிறுவனத்தினரின் அறிக்கைகள் -நூல்கள், தனியாட்களால் செய்யப்பட்ட நூல்கள், கட்டுரைகள், இலக்கியங்கள், கடிதங்கள், அச்சிற்பதிப்பிக்கப்பட்ட உரைகள், எனப் பலதரப்பட்ட ஆதாரங்களைப் பெறமுடியும். இவற்றுடன் அக்காலத்ததில் வெளியிடப்பட்ட பத்திரிகைகள் மிக முக்கியத்துவம் மிக்க ஆதாரங்களாக அமையும்.

பத்திரிகைகளில் வந்துள்ள விடயங்களை, வரலாற்றுத்தரவுகளாகப் பயன்படுத்துவதில் உள்ள பலம், பலவீனம் ஆகியவற்றையும் வரலாற்று ஆய்வாளன் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

பத்திரிகைச்சாதனம் பத்திரிகைக்கும் வாசகனுக்குமுள்ள ஊடாட்டம் என்ற அடிப்படையில் இயங்கும் சாதனமாகும். இங்கு பலஅம்சங்கள் ஒரு மையத்தில் குவிக்கப்படுகின்றது. அதுவே அப்பத்திரிகை வெளிவரும் பிரதேசமும், அங்கு வாழ்கின்ற மக்கட்கூட்டத்தினரும்ஆவர். இதனைக் குறிப்பதற்கு சமூகம் என்ற சொல்லைப்பயன்படுத்தலாம். ஒரு சமூகத்தில் பல்வேறு நோக்கம், தேவை, எதிர் பார்ப்பு, பிரச்சினைகள் ஆகியவற்றைக் கொண்டவர்கள் இருப்பர் என்பது பொதுவான விடயம்.

ஒரு பத்திரிகையானது பத்திரிகையின் ஆசிரியர்,( அவருடைய அறிவு, இலக்கு, கருத்துநிலை ஆகியவையும்) பத்திரிகைச்சாதனங்களின் உரிமையாளர். பத்திரிகையில் அலுவல் செய்வோர், பத்திரிகையில் விடயதானம் செய்பவர்கள்,( தகைமை, சிந்தனை) என்ற ஒரு தொகுதியினரைக் கொண்டதாக இருக்கும். அத்துடன், அந்தப்பிரதேசத்தில் அதிகாரம் பெற்றவர்களின் கட்டுப்பாடுகள் எவ்வாறிருந்திருந்தன என்றதன் அடிப்படையில், அவ்வரையறைகளை அனுசரித்து வெளிவர வேண்டியதாகவும் இருந்திருக்கும். அடுத்தபடியாக, அந்தப் பத்திரிகையின் நிதிமூலத்தின் நிபந்தனைகளுக்கும், அம்மூலத்தின் தேவை, எதிர்பார்ப்பு ஆகியவற்றைறையும், நிறைவு செய்ய வேண்டியதாக இருக்கும். இதன் பின்னர், இப்பத்திரிகையை வாசிப்பவர்களின், விருப்பு, தேவை, எதிர்பார்ப்பு ஆகியவற்றை நிறைவு செய்ய வேண்டியதாக இருக்கும்.

இவ்வாறு அமைந்திருக்க்கூடிய விடயங்களை மையமாகக் கொண்டே எந்தவொரு பத்திரிகையும் வெளிவரும். இவற்றை அறிந்து கொள்வதும், விளங்கிக் கொள்வதும், சாத்தியமாகும் பட்சத்திலேயே, அப்பத்திரிகையின் தகவல்கள், கருத்துக்கள், ஆகியவற்றை நாம் வரலாற்றிற்குப் பயன்படுத்திக் கொள்ளவும், அப் பத்திரிகையை மதிப்பீடு செய்யவும் இயலும்.

இந்த வகையில் இப்போதைய உரையானது, இருபதாம்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து வெளிவந்த மேற்படி பத்திரிகையைக் கவனத்தில் எடுக்கும் போது, இப்பிரதேசத்தில் ஆதிக்கம் செய்த பிரித்தானிய காலனித்துவத்தின் மேலாண்மைக்குட்பட்டே இப் பத்திரிகை பிரசுரமாகியது என்பதை அறிவோம். இதனால் பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்திற்கு விரோதமான விடயங்களை இப்பத்திரிகை தாங்கியதாக வந்திருக்கும் என எதிர்பார்க்க முடியாது. பத்திரிகைச் சாதனங்களை உடைமையாகக் கொண்டவராக பத்திராதிபர் இருந்த காரணத்தினால், அச்சக உரிமையாளரால் ஏற்படக்கூடிய தாக்கம் இவருக்கும் சுதேச நாட்டியம் பத்திரிகைக்கும் இருப்பதற்கு வாய்ப்பிருக்கவில்லை. ஆனால் பத்திராதிபரே குற்றம் காணப்பட்டு சிறை பெற்றவராக இருந்த காரணத்தினால், 1910 ஆம் ஆண்டின் பின்னர், கல்லடி வேலன் சுதேச நாட்டியம் பத்திரிகையின் முகாமையாளராகவும், அவர் சிறை சென்ற காலத்தில் பத்திரிகை நடத்திய க.நல்லதம்பி என்பவரே தொடர்ந்து பத்திராதிபராகவும் இருந்தார். இதனால், 1910ஆம் ஆண்டிற்கு முன்னர் பெற்றிருந்த தனியாண்மையைத் தொடரும் நிலை, பின்னர் குறைவடைந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. அது மட்டுமன்றி கால ஓட்டங்களுக்கு, ஏற்ப இடம்பெறும் மாற்றங்களும் பத்திரிகையின் வடிவமைப்பிலும், போக்கிலும், எண்ணம், சிந்தனைகளிலும் மாற்றங்கள் இடமளிப்பதற்கு வழி செய்திருக்கும்.

சுதேச நாட்டியம் பத்திரிகையின் நிதி வளத்தினைப் பார்க்கும் போது, அதன் ஆசிரியர், தாமே சொந்தமாக அச்சகம் வைத்திருக்கும் நோக்குடன் பலர் வழங்கிய உதவியால் அச்சுயந்திரம் ஒன்றை இந்தியாவில் இருந்து வாங்கி வந்திருந்தார்.

> "எமது சுயபொறுப்பிலோர் அச்சியந்திரம் நாம் வைத்திருக்க வேண்டுமென்றும், அதில் எமததிகாரத்துள் ஓர் புதினப்பத்திரம் நடைபெறவேண்டு மென்றும், நெடுநாளாய் நம்முட்குடிப்புக்கிருந்த பேரவாவை அனுகூலப்படுத்தமுயன்று, நாம் இலங்கையில் பற்பல பிரதான இடங்களிலும் இருக்கும் எமது நண்பராயுள்ள கனவான்களைப் போய்ச் சந்தித்தபோது, அவர்கள் மிக்கமரியாதையோடும் அன்போடும் அனுசரித்து உபசரித்து ஏற்ற உதவி செய்து எம்மனதைத் தளர்வுறாது உச்சாகப்படுத்திவிட்டனர். அவர்களின் நன்றியை விளக்கவும், அவர்களை நம் சிந்தைமறக்காமையைக் குறிக்கவும், அப்பிரபுக்களின் நாமதேயங்களையும் உபகரித்த தொகையையும், பின்வரும் பத்திரிகைகளின்கீழ்க் காட்டுவோம். எமதெண்ணத்தைக் கடைத்தேறுமாறு செய்து எமது நண்பர்க்கு எம் சீவியகாலம் முழுதும் மிக்க பயபக்கியும் கடமையும் பூண்டதாயிருக்கும்.'

இவ்வாறு அமைந்து காணப்படும் பத்திரிகைத்தகவல் பத்திராதிபரின் தனியான தன்மையைத் தெரிவிக்கும்வேளையிலேயே அவருக்கு உதவியாக உயர் வகுப்பினர் எனக் கருதக்கூடிய ஒரு பிரிவினரின் ஆதரவு இருந்ததையும் காட்டுவதாக உள்ளது. அதே பத்திரிகையில் தொடர்ந்து இடம் பெறும் பகுதி, அக்காலத்தில் இவருக்கு உதவியிருக்கக்கூடிய அல்லது, இவருக்கு நெருங்கிய நண்பர்களாக இருந்திருக்கக்கூடியவர்களில் சிலரின் பெயர்களை வெளிப்படுத்துவதாக உள்ளது.

> '...உபகரித்த பணத்தைக் கொண்டே யாம்சென்னபட்டணஞ்சென்று ஓர் அச்சியந்திரத்தையும் அதற்காம் சமஸ்தள பாடங்களையும் கொண்டு வந்து நம் அச்சியந்திரசாலையில் சேர்த்துவிட்டு சென்ற ஆனி மீ எ உ சனிக்கிழமை சுபமுகூர்த்தத்திலே முதல் முத்திரீகரணவேலையை ஆரம்பித்தோம். அன்று வலிகாமம் வடக்குமணியகாரன் ஸ்ரீ குமாரகுலசிங்கம், அப்புக்காத்து ஸ்ரீ ஐசக் தம்பையா, யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ கென்சுமன், ஸ்ரீ பரமசாமி, சுன்னாகம் பகுதிப்பராபத்தியக்காரன் ஸ்ரீ செல்லப்பா, பிறக்றர் ஸ்ரீ சி. பொன்னம்பலபிள்ளை, திருநாவுக்கரசு, வலிகாமம் மேற்கு மணியகாரன் ஸ்ரீ தில்லைநாதபிள்ளை முதலிய அனேக உத்தியோகஸ்தர்களும், பல இடங்களிலு மிருந்து இன்னும் அனேக சாமான்ய பிரபுக்களும் வந்துகூடினார்கள். சுதுமலை ஸ்ரீ முத்துக்குமாரபிள்ளை வைத்தியர் தற்காலம் யாழ்ப்பாணத்தில் வாத்தியத்தாற் பிரபலகீர்த்தி பெற்று விளங்கும் சொக்கலிங்கம், வயிரு எனப் பெரிய

வாத்தியக்காரரையும், அவர் குழுவினரையும் அவர்கள் வாத்தியக் கருவிகளோடு அழைத்துவந்து நமது சபையைத் தமது சபையாக மதித்துக் கொண்டாடினர்...

அன்று பொச்சாப்பினாலும், சாவகாசமின்மையாலும் வராதுவிட்ட சில உத்தியோகஸ்தரும், பிரபுக்களும் மறுநாள் வந்து, நம்மைச் சங்கித்துச் சந்தித்தோடு பத்திரிகையையும், அச்சியந்திரத்தையும் நடப்பிக்கும் வழிகளைக் குறித்தும் எமக்குப்பெரும் புத்திமதியும் புகட்டினார்கள்.' *(சு.நா. 15.09.1902)*

இவ்வாறு கிடைத்துள்ள அத்தகவல் க.வே. சாதாரண யாழ்ப்பாணத்தவர் என இருந்தாலும் அக்காலத்தில் வாழ்ந்த உயர் வகுப்பாரின் ஒரு பகுதியாருடன், நெருக்கமான தொடர்பு கொண்டவர் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. அது மட்டுமன்றி உயர் வகுப்பினரில் மற்றுமொரு பாலார் சம்பிரதாய அளவிலான தொடர்புகளைக் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதையும் புரிந்து கொள்ள முடிகிறது.

இவ்வேளையில் அவர் அக்காலத்தில் இந்தியாவில் வெளிவரும் பத்திரிகைகள் பற்றிய நுட்பங்களையும் அறிந்து வந்திருப்பதற்கும் இடமுண்டு. அச்சக உடைமையாளர் என்ற வகையில், நூல்கள், பிறபதிப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டமையால் பத்திரிகை வெளியிடுதல் என்பது, பகுதி நேரக் காரியமாகவே அமைந்துள்ளதென்பதும், அறியப்படும். இதனால் பத்திராதிபர் குறிப்பிடத்தக்க அளவுக்கு தாம் விரும்பிய வகையில், பத்திரிகையை வெளியிடக்கூடியதாக இருந்திருக்க முடியும்.

இந்த நிலையில் பத்திரிகையின் பிரசுரிப்பு, தொடர்ச்சி அல்லது நீட்டம் ஆகியவை பத்திராதிபருக்கும் வாசகர்களுக்கும் இடையிலான தொடர்பு, ஊடாட்டம் ஆகியவற்றை மையப்படுத்தியதாகவும், இரு சாராருக்கும் இடையில் காணப்படும் நெருக்கத்திலுமே தங்கியிருப்பதாக இருந்தது. இங்கு வாசகர்களின் எதிர்பார்ப்புக்களைத் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் பத்திரிகை நடத்தப்பட்டுள்ளது என்ற எண்ணம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

**இவ் ஆய்வுரையின் கால வரையறை**

சுதேசநாட்டியம் பத்திரிகை 1902ஆம் ஆண்டு தொடக்கம், 1947ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டுள்ளது. எனினும் முதலில் வெளிவந்த 1902 தொடக்கம் 1915ஆம்ஆண்டு வரையிலான காலகட்டத்திற்குரிய பத்திரிகைகளை மட்டும் மையப்படுத்திய வகையிலேயே இன்றைய உரை அமையும் என்பதை வலியுறுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு காலவரையறை செய்வதற்குப் பல காரணங்கள் உண்டு.

நாற்பது வருடங்களுக்கு மேல் வெளி வந்த பத்திரிகைகளை முழுமையாக ஒரு கட்டுரைக்குள் அடக்க முடியாது;

பத்திரிகையின் ஆரம்ப 'காலப்பகுதி பற்றிய ஆய்வு முதலில் இடம் பெறுவது அவசியம்;

இக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பெருமளவு பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருந்த (அவை பற்றிய பொதுவான பல விடயங்கள் இந்த ஆசிரியரால் முன்னர் எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் அடங்கியுள்ளது) போதிலும் முதலில் வெளிவந்த மத சார்பற்றதும், சமூகவிடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததுமான பத்திரிகையாக இந்தப் பத்திரிகை அமைந்திருப்பது

## பகுதி 5

இந்தப் பின்னணியில் இருந்து கொண்டு தான் 1902 – 1915 வரை வெளியிடப்பட்ட பத்திரிகைகளை நோக்க வேண்டியுள்ளது. இக்காலப் பகுதியில் வெளியிடப்பட்ட சொற்ப பத்திரிகைகளே கைக்குக் கிடைத்துள்ளன. அவற்றின் அடியொற்றியதாகவே இவ்வுரை

அமைகியது. இக்காலப் பகுதிக்குரிய மேலதிக பத்திரிகைகள் கிடைப்பின் இக்கட்டுரையின் கருத்துக்களில் மாற்றங்கள் இடம் பெறவும் வாய்ப்புக்களுண்டு.

கல்லடி வேலுப்பிள்ளையால் நடத்தப்பட்ட ***'சுதேச நாட்டியம்'*** என்ற பத்திரிகை 1902ஆம் ஆண்டு தொடக்கம் பிரசுரமாகத் தொடங்கியது. இப்பத்திரிகை 'டெமி'அளவில் வெளியிடப்பட்டது. பட்சமிரு முறையாக வெளியிடப்பட்டதால் ஒவ்வொரு மாதமும் இரண்டு தடவைகள் வெளி வந்தது. ஆரம்ப காலத்தில் பிரசுரமான பத்திரிகைகள் இன்று நாம் காணுகின்ற பத்திரிகைகளின் அம்சங்களையெல்லாம் உள்ளடக்கி வந்தனவெனக் கூற முடியாது. உதாரணமாக ஆசிரியர் தலையங்கம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வெளிவருவது போன்று கண்டிப்பான முறையில் வெளியாகவில்லை.

இப் பத்திரிகை, யாழ்ப்பாணத்தவர்களின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும் எண்ணம் கொண்டதாய், '*The Jaffna Native Opinion*' என்ற ஆங்கிலப் பெயரைக் கொண்டு வெளிவந்தது. ***'சுதேச நாட்டியம்'*** என்ற இப்பெயர் வேலனின் சிலேடை மொழிக்கு மிகச் சிறந்த உதாரணமெனலாம். இப்பெயருக்குப் (சுதேசம் + நாடு + இயம் ) பல பொருள்களைக் காணமுடியும். அவையாவன:

1). சுதேசிகளின் நாடு பற்றிய விடயம்,
2). சுதேசிகளின் எண்ணங்கள், அல்லது அபிப்பிராயங்கள்,
3). உள்ளூரவர்களின் சமூக ஆட்டம்,

இப்பத்திரிகையின் தலைப்புத் தெரிவு பற்றி, ஆசிரியர் தமது முதற் பிரதியில்,

> 'இவ்வாறோர் பத்திரிகையை நாம் நடப்பிக்க முயன்றிருப்பதை அறிந்தவரான நம் விசேஷ நண்பர் சிலர் (Native Opinion) நேற்றிவ் ஒப்பினியன் பத்திராதிபரை உமக்கு நண்பராக்கிக் கொண்டாலோ என்றும், உமது பத்திரிகையின் நாமமும் நேற்றிவ் ஒப்பினியன் என்றிருந்தாலோ என்றும் எம்மோடு பரிகாசமாய்ப் பேசியதை ஞாபகப்படுத்தவும் அவர் எம்மேற் கொண்ட தவறான எண்ணத்தை அவர்க்கெம் செய்கையால் காட்டவேண்டுமென்றாஞ்சித்துமே நேற்றிவ் ஒப்பினியன் என்னும் பெயரோடு அப்பொருட்பொதிந்த "சுதேசநாட்டியம்" என்னும் பெயரையும் இப்பத்திரத்திற்குச் சூட்டலாயினோம்.' *(சு.நா. 15.09.1902)*

*'Native Opinion'* என்ற பெயர் தாங்கிய பத்திரிகையொன்று பம்பாயிலும், (Digby,1875:22)*'Native Public Opinion'*(Digby,1875:23) என்ற பெயர் தாங்கிய பத்திரிகையொன்று சென்னையிலும் வெளியிடப்பட்டுள்ளது. இந்தவிடயம் யாழ்பாணத்தின் ஆங்கிலம் கற்ற வகுப்பினர் மத்தியில் அறியப்பட்ட விடயமாக இருந்திருப்பதில் ஆச்சரியமில்லை. அதனாலேயே வேலன் குறிப்பிட்ட வகையில் அவருடைய பத்திரிகையின் பெயர் பற்றிப் பரிகாசம் செய்திருந்தனர்.

***'சுதேச நாட்டியம்'*** பத்திரிகை தொடங்கப்பட்டதன் நோக்கம் பற்றி அதன் ஆசிரியர் தமது முதலாவது பத்திரிகையில், பின்வரும் வகையில் குறிப்பிட்டுள்ளார்.

> 'நாமிப் பத்திரிகையை ஒருவரைத் தூஷிக்கும் நோக்கமாயல்ல, எமது நயத்துக்காகவும், பிறர்க்கு விஷேச சற்புத்திகளையும், நூதன சம்பவங்களையும், பிற தேச வர்த்தமானங்களையும் அறிவிக்கும் நோக்கமாகவுமே தொடங்கினோம்' *(சு.நா. 15.09.1902)*

இங்கு கல்லடி வேலுப்பிள்ளை தமது பத்திரிகை வெளியிடுகையின் நோக்கை மிகவும் வெளிப்படையான வகையில் கூறியிருப்பது அவதானிக்கத் தக்கது. பத்திரிகை வெளியீட்டிற்கான பணத்தின் அடிப்படை பற்றி இங்கு குறிப்பிடல் வேண்டும்.

இவரது பத்திரிகையின் தொடக்கத்தில் இருந்து 1932 ஆம் ஆண்டு வரையான பத்திரிகைகளில் பின் வரும் பாடல் முகப்புக்கவிதையாக இடம் பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

சுகந்தா நிதியந்தா தூய திடநெஞ<br>
சகந்தா செய கந்தா வையா – செகந்தாவி<br>
யாடுமயி லேறிவிழை யாடசுர ரோடுசம<br>
ராடுகுக வாறுமுக வா.

1930களில் இருந்து வெளி வந்த பத்திரிகைகளில் **"யதார்த்தவாதி,- வெகு ஜன விரோதி"** என்ற மகுட வாசகம் பொறிக்கப்பட்டிருப்பதையும் காண முடிகிறது.*( சு.நா.16.11.1932)*

### சுதேச நாட்டியத்தின் முகப்பு பக்க வடிவமைப்பில் வரைபுகளின் சிறப்பு:

ஆரம்ப காலத்தில் அதன் முகப்பில் வரையப்பட்டிருந்த சித்திரம், ஒரு புறத்தில் பனை மரமும், மறு பக்கத்தில் தென்னை மரமும் பதியப்பட்டதாகவும், நடுவில் இடது கைப்பக்கம் பார்த்தவண்ணம் நிற்கும் வகையில் குடும்பியுடன் உள்ள மனித உருவமானது, வலது கைத்தோளின்மேல் துணித்துண்டை அணிந்ததாகவும், இடது கையில் பத்திரிகையை வைத்திருக்கும் வகையிலும் சித்திரிக்கப்பட்டுள்ளது. அந்த மனித உருவத்தின் ஆடையும், தோற்றமும் காலனித்துவ செல்வாக்கினால் மாற்றப்படாத, சுதேசியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது எனக் கருத முடிகிறது.

'சுதேச நாட்டியம்' பத்திரிகையில் கூடியளவு மனங்கவர்ந்த விடயம் அதனுடைய முகப்பு வரைபுகள் எனலாம். குறிப்பாக, 1909ஆம் ஆண்டு தொடக்கம் வெளிவந்த பத்திரிகைகளின் முகப்பு வரைபு, எவரையும் ஈர்க்கும் தன்மை கொண்டதாகும். அச்சுக்கலையானது சுதேச தேவைக்கு, உள்ளூரவர்களால், கலைநுட்பம், கலைநயப்பு, கருத்துச் செறிவு ஆகியவை வெளிப்படும் வகையில் பயன்படுத்தப்பட்டமைக்கான சிறந்த எடுத்துக்காட்டாக இவ் வரைபுகள் காணப்படுகின்றன. ஒரு அலங்கார நடனமாது மையத்தில் அபிநயித்து நிற்க, இரு புறத்திலும் வாத்தியகாரர் வாத்தியங்களுடன் வாசிக்கும் நிலையில் நிற்பதைச்சித்திரிக்கும் காட்சி அதுவாகும். அவர்களின் வாத்தியங்கள் ஆடையலங்காரங்கள் என்பவை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் புறத் தோற்றப்பாட்டினை வெளிப்படுத்துவதாக உள்ளன. இவற்றை வரைந்தவர் **கல்லடியானின் நண்பரான துரைச்சாமியாக** இருக்க முடியும். இதே காலத்தில் வெளிவந்த ***'இந்து பால போதினி'*** என்ற பத்திரிகையிலும் பதிப்பிக்கப்பட்டுள்ள முகப்பு வரைபு மனங்கவர்வதாகவும், அக்கால மக்களின் ஆடை அலங்காரங்களைப் பிரதிபலிப்பதாயுமுள்ளது குறிப்பிடத்தக்கது.***(இந்து பால போதினி,*** 25.01.1910

1920 களில் சுதேச நாட்டிய பத்திரிகையின் முகப்பு வரைபு மீண்டும் மாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதைக் காணலாம். அடுத்து வந்த சித்திரிப்பு, காலைக்காட்சியைப் பிரதிபலிப்பதாயும் தாமரை மலர், சூரியன், ஆகியனமையத்திலும், இரு புறங்களிலும் சரஸ்வதி, இலட்சுமி ஆகியோரையும் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

### நிதி நெருக்கடியும், கையொப்பகாரரும், விளம்பரதாரரும்

ஆரம்ப காலத்தில் பொதுவாக எல்லாப் பத்திரிகைகளுமே வர்த்தக விளம்பரங்களின் உதவியுடனும், கையொப்பகாரரின் உத்தரவாதத்துடனும்தான் நடத்தப்பட்டன. ஒருவர் தாம் வெளியிடப் போகும் பத்திரிகையை நடத்துவதற்கு வசதிமிக்க சிலரின் உதவியை நாடி, அவர்கள் பணம் வழங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டுக் கொள்வர். கையொப்பம் வழங்கி, பத்திரிகை வாங்குவதாக ஒப்புக் கொண்டவர்களுக்குத் தமது பத்திரிகைகளை அனுப்பி வைத்தபின், அவர்கள் ஒப்புக் கொண்டவாறு பணத்தை வழங்காது விடுவதும் உண்டு. இதன் காரணமாகப் பத்திரிகையாளருக்கு ஏற்படும் நெருக்கடிகளைத் தமது சொந்தப் பத்திரிகைகளிலேயே வெளியிட்டுள்ளனர்.

சுதேச நாட்டியம் பத்திரிகையின் இரண்டாவது பிரசுரத்தின் முதற் பக்கத்தில் எழுதப்பட்டிருந்த கோரிக்கை பின்வருமாறு அமைந்திருந்தது. அக்காலப் பத்திரிகைகள் பற்றிய சில தகவல்களை இதன் மூலம் பெறக் கூடியதாக இருப்பதால் அதனை இங்கே தருகிறேன்.

> 'அடியேம் மேல் அன்பகலாத நண்பீர்! எமது பத்திரிகையின் கையொப்ப நண்பர் எமது பத்திரக்கிரயத்தை முந்தக்கட்டாததினாலும், எமக்குப் பிறவூர்க்குச் செலவழிந்து போம் பத்திரத் தொகை சுமார் முறை ஒன்றுக்கு 1500 வரையளவில் இருப்பதாலும், இத்தொகைய பத்திரத்தை ஒரு வருடம் அனுப்பும்போது அதினால் எமக்கு முத்திரைக்கு வருஞ் செலவு சுமார் வருடம் ஒன்றுக்கு 750 ரூபா வரையில் வருதலானும், முதன்முறையில் இத்தொகைய முத்திரைத் தொகையை எம் கைப் பொறுப்பிற் செலவிட்டு அனுப்ப நாம் "கொதி பொறாத நொய்யரிசி" நிலையினமாயிருத்தலானும் எழுந்த எமது ஆற்றாமையால் முதல் வருடத்துக்கு அப் பொறுப்பை உங்கள் மேற் சுமத்தி முத்திரை ஒட்டாது அனுப்ப யோசித்து அவ்வழியை அனுட்டித்தேம். பத்திரிகா விகிதத்தில் ஒவ்வோரிடங்களுக்கும் குறித்திருக்கும் தொகையைக் காணலாம். முத்திரைச்செலவு உங்களுக்கு 2 சதத்திற்கு 4 சதமும், 3சதத்திற்கு 6சதமுமாய் இரட்டிப்பதால் அத்தொகையைத் தள்ளி வருமதியாயிருக்கும் எஞ்சிய தொகையை முற்பணமாயனுப்பி விடும்படியும், அவ்வாறனுப்பப்படும்போது முத்திரைச் செலவை நாம் பொறுப்பது கூடியதாயிருக்கும் என்பதையும், மிக்க வேண்டுதலோடு உங்களுக்கு அறியத் தருகின்றேம். "எனக்குத் தம் பத்திரிகை அனுப்ப வேண்டும் அதை ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றேன்" என இதுவரையில் அவ்வவ்விடங்களிலிருந்து ஏறக்குறைய 350 பெயர் வரையில் தம் விலாசத்தை அனுப்பினர். அவர்போலவே மற்றய நண்பரும் தேடி எமது பத்திரிகையை வாங்குவரென்பது எமது பூரண சித்தாந்தம்.'(*சு.நா. 29.09.1902*)

இவ்வாறு மிகவும் நிதானமாக எழுதி, பத்திரிகைக்கான கிரயத்தினைக் கேட்டு வந்த கல்லடி வேலன், பிறிதோர் இதழில் சற்றுக் காரசாரமாக எழுதிக் கேட்பதையும் காண முடிகிறது.

> 'கையொப்ப நண்பீர்! எமது பத்திரிகையின் மூன்றாம் புத்தகமும் வெளிப்பட்டு, மூன்று நாலு மாசங்களாகிறதே!! நீர், உம்மால் வரவேண்டிய பணத்தை இன்னும் அனுப்பாதிருப்பது நீதியா? உங்கள் போல் யோக்கியதையும் நல்லறிவும் உள்ள பிரபுக்கள் எங்கள் முயற்சியையும் பொருட் செலவையுஞ் சிந்தித்து ...உம்மால் வரவேண்டிய பணத்தை அனுப்ப ஏவப்படாது, புண்ட தோணி துறையிற்கிடப்பது போற் கிடப்பதற்கு நியாயமென்ன?
>
> 1). சொற்ப பணமென்பதா?
> 2). கொடுக்கிறதில்லை என்பதா?
> 3). அவசியமல்ல என்பதா?
> 4). முட்டுப்பாடா?
> 5). மறதியா?
> 6). வெட்கமா?
> 7). அனுப்ப வழி தெரியாமையா?
> 8). நேரமில்லையா?
> 9). பணம் கொடுத்ததை யோக்கியர் அறிந்தால் பரிகாசஞ் செய்வார் என்பதா?
> 10). வழக்கமில்லையா?
>
> இவைகளிலொன்றானால் அதை இரகசியமாக எமக்கு எழுதி அறிவிக்கப்படாதா? இன்னார் தரவேண்டும். இன்னார் தர வேண்டுமென்னாது பொதுவாய் நாம் எழுதுவதால் என்னையல்ல, அவரையென்று எண்ணுகின்றீரா? நாமிப்படி இன்னாரென்று குறியாதிருப்பதற்கு ஞாயம் உமது அறிவிற்குத் தெரியவில்லையா?
>
> தயவு செய்து கவனியும் ! கவனியும்!! என்று ஆயிரமுறை எழுதவும் கவனயீனமேன், இன்றும் பழம் பாடத்தையே எழுதி உம்மை ஆயிரநமஸ்காரத்தோடு கேட்டுக் கொள்கின்றோம்.'(*சு.நா. 23.01.1905*)

பத்திரிகையின் பொருள் வளம், சந்தாவிற்கு அடுத்த படியாக, விளம்பரங்கள் வாயிலாகக் கிடைத்ததெனக் கூற முடியும். பத்திரிகையின் நான்கில் ஒரு பகுதி விளம்பரங்களால் நிரப்பப்பட்டிருந்தது.

**கல்லடி வேலன் என்ற பத்திராதிபர்:**

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பத்திரிகை நடத்துதல் என்பது மிகவும் இலகுவான காரியமாக இருக்கவில்லை. மிகவும் பிரயத்தனப்பட்டு வாசகர்களையும் இழக்காமல், பத்திரிகையையும் நிறுத்தாமல் நடத்துவதென்பது, வசதி அதிகம் இல்லாத தனிநபர்களுக்கு ஒரு சவாலாகவே இருந்திருக்கும். அக்காலத்தில், ஆரம்பிக்கப்பட்ட பல பத்திரிகைகள் விரைவிலேயே இத்தகைய சவால்களைச் சமாளிக்க முடியாது ஒழிந்து போக சுதேச நாட்டியம் நீடித்து நிலை பெற்றமை அதுவும், ஏறத்தாழ அரைநூற்றாண்டு நீடித்து நிலைத்தமை பத்திரிகை நடத்தியவரின் சாதனை என்றே குறிப்பிட வேண்டும். அடிப்படையில் கல்லடி வேலன் ஒரு சிறந்த பத்திரிகை யாளனாக இருந்தமையே இதன் வெற்றியை நிர்ணயித்தது எனக்குறிப்பிடுவதில் தவறிருக்க முடியாது. ஏனெனில் மாறி வரும் சூழ்நிலைகளுக்கும், வாசகர்களின் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் அவர் பத்திரிகையை ஆக்கி வெளிப்படுத்தியமையே அதன் நிலைப்பிற்கு அடிப்படையான காரணமாக இருக்க வேண்டும்.

கல்லடி வேலனின் சுதேசநாட்டியப் பத்திரிகையின், பத்திரிகா நிலைப்பாடு பற்றி அவரது பத்திரிகைகளை ஆதாரமாகக் கொண்டு சில அம்சங்களை எடுத்துக்காட்ட முடியும். அவற்றுள் முதலாவதாகக் கூறக்கூடியது அவர் கடைப்பிடித்த சமயம் சார்ந்த நடுநிலைக் கொள்கையாகும். ஆரம்ப காலப்பத்திரிகைகள் பல, சமயத்தை முதன்மை நோக்காகக் கொண்டு தொடங்கப்பட்டவையாகவும், சமய அடிப்படையிலான முரண்பாடுகளுக்கு இடமளிப்பவையாகவும் அமைய, இவரது பத்திரிகை அவ்விடயத்தில் நடுநிலையைக் கடைப்பிடித்தமை முன்னேற்றமானதாக இருந்ததுடன், அவரதுபத்திரிகை ஏனைய மதத்தவர்களாலும் ஆதரிக்கப்படுவதற்கு இடமளித்தது. அதிகமாக எல்லாப் பத்திரிகைகளிலும் பிள்ளையார் சுழி, சிவமயம், ஓம், பரமபதி துணை ஆகியவற்றுள் ஒன்றோ இரண்டோ முதற்பக்க ஆரம்பத்தில பொறிக்கப்பட்டிருக்க, (நாம் கடிதம் எழுதத் தொடங்கும் போது எழுதுவதைப்போன்று), சுதேச நாட்டியத்தில், அத்தகை பொறிப்புக்களைத் தவிர்க்கத் தொடங்கியிருந்தமை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. சைவசமயம் சார்ந்த விமர்சனங்களும், வாதப்பிரதிவாதங்களும் இடம்பெறுவதைத் தவிர்க்கவில்லை. இவற்றிற்கு மேலாக அவர் தமது சொந்த கருத்தின்படி ஒரு அதி வைதிகப் போக்குக் கொண்ட சைவனாக இருந்திருந்தார் என்பதையும் அவதானிக்க முடிகிறது.

> 'இப்பத்திரிகை'யில் எம்மார்க்கத்துக்கேனும் விரோதமான கடிதங்கள் வெளிப்படுத்தப்படுகிறதில்லை. ...ஏதுமோர் ஏதுகொண்டு ஒரு கடிதம் பிரசுரிக்கப்படுமாயின் மறுபக்கத்தார் கடிதத்திற்கும் அவ்வுரிமை யுடையதாயிருக்கும். எப்பிரபுக்களாயினும், எவ்வதிகாரிகளாயினும், எவ்வுத்தியோகத்தராயினும், எக்குருவாயினும், எந்நண்பராயினும், எக்கலாஞானிகளாயினும், நீதியற்ற கிரியைகளைச் செய்கிறவராய்க் காணப்படுவாராயின், அக்கிரியையையும், அவர் கீழ்நிலையையும் எடுத்து வெளிப்படுத்த எதற்காயேனுமஞ்சி எம்மனஞ் சிறிதாயினும் பின்னிற்கப்ப போகிறதில்லை. இதுவே நடுநிலையும் பொதுநன்மையும் விரும்பும் பத்திரிகாலட்சணமாம்.' *(சு.நா. 15.09.1902)*

மேற்குறித்தபடி பத்திரிகாலட்சணம்பேசிய கல்லடி வேலன் பத்திரதாதிபர் என்ற வகையில் பின்பற்ற வேண்டிய பத்திரிகா தர்மத்தைப்பற்றியும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

> '...வல்வை எஸ். இராசரத்தினம்பிள்ளை என்ற கைச்சாத்திட்டு "விவேகானந்த பத்திராதிபரின் விபரீத சிந்தனை" என்ற முகநாமமிட்டனுப்பிய கடிதம் பெற்றேம். பத்திராதிபரின் விவேகம், ஒழுக்கம், மரபு, முதலியவைகளைக்குறித்துக் கடிதர் மிகத்தாக்கமான வாக்கியங்களைப்

பிரயோகித்திருப்பதால் அக்கடிதத்தை வெளிப்படுத்தன் முறையன்றென நிறுத்தினம். அவரைக்குறித்து யாவருமறிவர். கடிதர் சொல்வதிற் பிரயோசனமில்லையென்பதெங்கருத்து. தமிழ்ப்பாஷையை வாசித்து விளங்குவதிலும் எழுதுவதிலும் இவர் விபரீதமானவர் எனக்கடிதர் கூறியது நமக்கும் உடன்பாடாயிருக்கலாம். பத்திராதிபர் எந்நிலையினராயினும் நாமவரைத்தூற்றவும், தூற்றுவார்க்கிடங்கொடுக்கவும் மாட்டோம்.( *சு.நா. 30.05.1904)*

பத்திரிகைத்துறையில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்ட கல்லடியான் அக்காலத்தில் வெளிவந்த ஏனைய தனியார் பத்திரிகைகளுக்கு, ஆதரவு வழங்கவும் தயங்கவில்லை. குமாரசுவாமிப்புலவரின் மாணவனாக விளங்கியவரும், சைவப்பிரசாரகராக இலங்கையிலும் இந்தியாவிலும் புகழ் பெற்றிருந்தவருமான மு.இரத்தினேசுவர ஐயரைப் பத்திராதிபராகக் கொண்டு வெளிவந்த, ***குருசந்திரோதயம்*** என்ற பத்திரிகையின் ஆரம்பகால அச்சுப்பதிப்பிற்கு உதவியதுடன், அப்பத்திரிகையில் விடயதானங்களையும் எழுதியிருந்தார். அப்பத்திரிகையில் இவர் சிறைவாசம் அனுபவித்தபோது, எழுதிய. கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்ததுடன், இவரைப்பற்றிய முக்கியத்துவம் மிக்க சிலகுறிப்புக்களும் எழுதப்பட்டிருந்தன. (கடிதம் அடிக்குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. ***குரு சந்திரோதயம்,*** 25.05.1911) மற்றொரு பத்திரிகையான ***விஜயலட்சுமி***யிலும் இவர் சிறை வாசம் பெற்ற செய்தி பின்வரும் வகையில் எழுதப்பட்டிருந்தது.:

> 'இவர் எட்டு வருடங்களாக ***சுதேச நாட்டியம்*** என்னும் தமிழ்ப் பத்திரிகையைத் தமது சாரதாபீட அச்சாபீசில் அச்சிட்டு நடத்தியவர். இவர் யார் வரினும் எது எது வரினும் தமக்கு நீதியென்றும், முறைமை என்றுங் காண்பவைகளை, நேர் நேராகத் தமது பத்திரிகை வாயிலாகவும், அவரவர்களைத் தனித்தனி கண்டு நேர்முகமாகவும், கண்டித்து வந்தவர். பத்திராதிபரும் பரோபகாரியும் ஆகிய இவர்க்குச் சம்பவித்த ஊழ்வலிக்கு மிக விசனிக்கிறோம்.' (***விஜயலட்சுமி,*** 09.07.1910)

சிறைவாசத்தை எவ்வளவு காலம் அனுபவித்தார், என்பது பற்றித் தெளிவாக அறிய முடியவில்லை. அவர் சிறை சென்ற காலத்தில் பத்திரிகையை, நடத்திய நல்லதம்பி என்பவர், தொடர்ந்து பத்திராதிபராகத் தொடர்ந்து செயற்பட்டவராவர். ஆனால் விடயங்கள் யாவும் க.வேயினாலேயே எழுதப்பட்டனவாகத் தெரிகிறது. 1932 ஆம் ஆண்டில் பத்திரிகைகளின் முக்கியத்துவம் பற்றியும், பத்திரிகை வாசகர்கள் பற்றியும், சுதேச நாட்டியம் பத்திரிகையில் வெளிவந்த விடயங்கள், எமக்கு அக்காலப் பத்திரிகைகளின் நிலை பற்றி அறிவதற்கு உதவுவதாக அமையும்.

> '**தமிழ்ப்பத்திரிகையின் தழர்வு**-தற்போதைய உலகத்தைப் பத்திரிகையுலகமெனல் பொருந்தும். மேனாடுகள் பத்திரிகைகளாலேயே முன்னேற்ற மடைந்துள்ளன. கீழ் நாடுகளோ பத்திரிகை விஷயத்தில் கவனம் செலுத்துவதாகக் காணோம். எமது யாழ்ப்பாணநாட்டில் தமிழருக்கெனத் தோற்றிய பத்திரிகைகள் பல. அவற்றுட்சில ஆதரவு கிடைக்காமையால் அழிந்தொழிந்து போக எஞ்சியிருப்பவை மிகச்சிலவே. அவையும் ஆதரவின்மை என்னும் நோயாற் பீடிக்கப்பட்டு ஒருவாறு உயிருடன் இருந்து வருகின்றன. நமது நாட்டில் நடைபெறும் பத்திரிகைகள் பெரும்பாலும் சாதாரண அறிவு படைத்தவர்களாலேயே ஆதரிக்கப்பட்டு வருகின்றன. ஆனது பற்றி அவற்றில் வெளிவரும் விஷயங்கள் யாவரும் விளங்கிக் கொள்ளுமாறு சிறுச் சிறுச் சொற்களால் தொடரின்றி எழுதப்படல் வேண்டும்'.(*சு.நா. 16.11.1932)*

இதனை அவதானிக்கும் போது சாதாரண மக்களின் வாசனைக்குரியவையாகவே தமிழ்ப்பத்திரிகைகள் இருந்தன என்பதையும், ஆதரிப்பாரின்றியே பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன என்பதையும் விளங்க முடிகிறது.

## தமிழ் மொழியும் க. வே.யும், சுதேச நாட்டியமும்

அக்காலத்தில் இலங்கையிலும், தென்னிந்தியாவிலுமிருந்த தமிழ்மக்கள் மத்தியில் காணப்பட்ட,தமிழ் மொழி மீதான அபிமானமும், எவ்வகையிலேனும் தமிழ்மக்கள் தமிழ் மொழியைக் கற்கவும் பேசவும் வேண்டுமென்ற எண்ணம் க.வேயிடமும் இருந்தது. அவர் தமிழ் மொழியில் பேசத்தயங்கியவர்களையும், ஆங்கிலமொழியிலும், மேற்கத்தைய நாகரிக நடை, உடை. பாவனைகளைக் கைக் கொண்டவர்களையும், மிகவும் ஆக்ரோஷத்துடன் விமர்சித்துள்ளார். இந்தவிடயத்தில் பெண்களை மட்டுமன்றி ஆண்களையும் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் தாக்கியுள்ளார்.

இப்பத்திரிகையின் வாசகர்கள் பெரும்பான்மையும் சாதாரண குடிமக்களாக இருந்தனர். எனினும், தமிழ் மொழியில் ஆழமான புலமை மிக்க தேர்ச்சியாளர்களும் இப்பத்திரிகையை வாசித்ததுடன் விடய

தானங்களையும் செய்திருந்தனர். அவர்களுள் மு.இரத்தினேசுவர ஐயர், சி.கணேசையர் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். சுதேச நாட்டியம் பத்திரிகையின் ஆரம்ப கால இதழ்களில் புன்னாலைக் கட்டுவன் சி.கணேசையர் அவர்களின் கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டுவந்துள்ளதைக் காணமுடிகிறது. முதலாம் புத்தகம் இரண்டாம் இதழில் 'திராவிட கோகிலம் என்ற பத்திரிகையில் பதியுண்மையை நிருபிக்கவேணடும் என்ற கோரிக்கைக்கு பதிலாக பதியுண்மையைத் தாபிக்கும் வகையில் எழுதப்பட்ட விபரமான கடிதம் வெளியிடப்பட்டிருந்தது. உடுப்பிட்டி ஸ்ரீ.அ.சிவசம்புப்புலவரவர்களியற்றிய வள்ளியம்மை திருமணப்படல உரைப்பிழைகள் என்ற தலைப்பில்எழுதியுள்ள கடிதத்தில், அவரது பன்னிரண்டு செய்யுட்களுக்கான உரைப்பிழைகள் விளக்கமான முறையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. *(சு.நா.29.09.1902)*
தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் இக்காலத்தில் பழம்பெரும் நூல்களுக்கு உரையெழுதும் வழக்கம் தேர்ச்சி மிக்க புலவர்களால் எழுதி வெளியிடப்பட்டு வந்தது. இத்தகைய நூல்களில் காணப்படும் தவறுகள் பத்திரிகை வாயிலாக விமர்சனத்திற்கும், விவாதத்திற்கும் உட்படுத்தப்பட்டது. இக்கருத்து மோதல்கள் ஏற்கெனவே தமிழ் உலகில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், இவற்றை இவ்வேளையில் சாதாரண வாசகர்களும் வாசிக்கும் நிலை இருந்ததென்பது ஆச்சரிய மூட்டுவதாயுள்ளது. அவ்வாறு இடம்பெற்ற ஒரு விவாதத்தின் போக்கினை உதாரணத்திற்கு மேலே காட்டலாம்.

> சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் வினாவும் சூடாமணிநிகண்டுரை வினா. புலவீர்! 'நமது பாடசாலையில் நிகண்டு படிக்கும் மாணவர்கள் மூன்றிடத்திற் பதிப்பிக்கப்பட்ட சூடாமணி நிகண்டுப் பிரதிகள் கொண்டு வந்தார்கள். மூன்றும் நுமது சொற்பொருளுடையனவாகவே இருக்கின்றன.அம்மூன்றும் சொற்பொருளாலே ஒன்றோடொன்று மாறுபடுகின்றன. மூன்று விதமாக எழுதினோரோ? மாணவர்கள் எதையென்று நம்பிப் படிப்பார்கள்.? ஒருவரே மூன்று முறையாக உரை எழுதி அச்சிடின் பொருள் நிச்சயம் எப்படிப் பெறலாம். எப்பதிப்பு நிச்சயமான பொருளுடையதென அறிவிக்குக.' இங்ஙனம், தாமோதர உபாத்தி, காங்கேசன்துறை. ( *சு.நா 12.07.1909)*
>
> ' சைவ பால்ய சம்போதினியிற் றோற்றிய பழம்பதிப் பாலகங்காதரவர்களுக்கு நானெழுது பவைகளைச் சற்றே சன்னதமின்றி யுற்று நோக்கி யுணரும்படி கோருகின்றேன்.'
>
> 'சுன்னாகம் ஸ்ரீமத் அ.குமாரசுவாமிப்புலவரவர்கள் பாடினவென்று வெளிப்படுத்திய கவிகள் பிழையுள்ளன. அப்பிழைகள் புலவரவர்களால் விடப்பட்டனவல்ல. கரலேக நாதியால் வந்தன" எனத் தாமும்...'பரமார்த்த குருவின் சீஷ! பாலகங்காதர!! 'உள்ளதையுங் கெடுத்தான் நொள்ளைக்கண்ணன் , என்பது போல, புலவருக்குள்ளதையும் கெடுத்துவிட வழிதேடாதீர். நாட்டியத்தோடு மேட்டி காட்டிய வனேகர் தம்மை மாட்டி, அளியாத்துயரை யீட்டி, இகழ் முடி சூட்டி, பலகோட்டி நகைக்கப்பின் காட்டி, யோட்டெடுத்ததைக் கேட்டறிந்திருப்பின் இவ்வாறு துணியீர்." இங்ஙனம் உ.. முதிய கங்காதரன், புதுப்பதி.' *(சு.நா. 27.06.1910)*

க.வே.யின் பத்திரிகை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வெளிவரத்தொடங்கியதாயினும், சாதாரண அறிவு கொண்ட வாசகர்களையும் கருத்திற் கொண்டு எழுதப்படவேண்டியதாக இருந்தது.அது மட்டுமன்றி, இக்காலப் பத்திரிகை மொழி நடையே, பின்வரும் காலங்களுக்கு முன்னோடியாகவும் அமைய வேண்டியதாக இருந்தது. மரபு வழிக் கல்விப் பயிற்சி பெற்றிருந்த க.வே. இத்தகைய பிரச்சினையை இயலுமான வரையில் எதிர் கொண்டு நீண்ட காலம் வாசகர்களைத் தனக்கெனப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.
இவரது எழுத்துக்களில், நல்ல தமிழ்ச் சொற்கள் கையாளப்பட்டிருப்பதைப் பல இடங்களில் காணலாம். கடிதர், மலமுத்தர், லிற்றன் பெருமான், இராசமாலிகிதர், துரைச்சானி, திருஷ்டாந்தம், போன்ற சொற்களைக் குறிப்பிடலாம். பத்திரிகைத் தலையங்கங்கள் எழுதும் போதும், பத்திகளுக்குத் தலைப்புக்கள் இடும் போதும் சொற்சிக்கனமான முறையில் வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக சில தலைப்புக்களைக் காட்டின், 'நீ, நீவிரார், விரும்பினால் எடு , சறுக்கீசு ஆட்டமும் உறுப்பீசு ஓட்டமும்' போன்றவகையில் அமைக்கப்பட்டிருந்தன.

இப்பத்திரிகையில் புனை பெயர்களில் அதிகளவு விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. க.வே. பெரும்பாலும் ஒரே புனை பெயரைப் பயன்படுத்தாது, தேவைகளுக்கேற்ப புதிய, புதிய புனை பெயர்களில் எழுதியுள்ளார். உதாரணமாகப் 'பழம்பதிப் பாலகங்காதரர்' என்ற புனை பெயரில், ***பாலசம்போதினி*** என்ற பத்திரிகையில் எழுதிய கடிதத்திற்குப் பதிற்கடிதம் எழுதும்போது, 'முதிய கங்காதரன் புதுப்பதி' என எழுதியுள்ளார். ஆறுமுகம் என்பவருக்கு விமர்சனம் எழுதும் போது 'ஏழுமுகத்தான்' என்ற புனை பெயரைக்குறித்துள்ளார்.

இதை விடப் புரியாத சில புனை பெயர்களையும் பயன்படுத்தியுள்ளார். உதாரணமாக, 'உப்பாற்றுக்குடை'( உள்ளுக்குள் குடைதல்?) என்ற புனை பெயர் எதைக்குறிக்கிறது எனப் புரியவில்லை.

கவிபுனைவோராகவும், சிலேடைப்பிரயோகங்களை அதிகம் கைக் கொள்பவராகவும், இருந்த காரணத்தினால், இவரது எழுத்துக்களில் தனித்தனிச் சொற்கள் இடம்பெறுவதை விடத், தொடர்ச்சியாக ஒரு வசனத்திலுள்ள சொற்களைப் புணர்த்தியெழுதியிருப்பதையும் காணலாம். இதனால் சிறிய பத்திரிகையாக இருப்பினும், விரைவாக வாசித்து முடிக்க இயலாது. அத்துடன் அந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் விடயத்தை உடனடியாகக் கிரகித்துவிடவும் முடியாது. இப்பத்திரிகை மாதத்தில் இரண்டு தடவைகள் வெளிவந்த காரணத்தினால், வாசகர்கள் பலர் சேர்ந்து பகுதி, பகுதியாக வாசித்துக் கலந்துரையாடியிருப்பதற்கும் இடமுண்டு. புராணங்கள் வாசித்துப்பயன்சொல்வப்படுவது போன்று, ஆரம்பகாலப் பத்திரிகைகளும் கூட்டு வாசிப்பிற்கு உரியதாக இருந்திருக்க முடியும்.

க.வே ஒருசிறந்த பத்திரிகையாளனுக்குரிய பண்புடன் அக்காலத்தில் வெளிவந்த நாவல்கள் பற்றியும், அக்காலத்தில் வெளிவந்த பிற பத்திரிகைகள் பற்றிய செய்திகளையும், வாசகர்களுக்கு அறியப்படுத்தியிருந்தார். அவர் மங்களநாயகம் தம்பையா அவர்களால் எழுதப்பட்ட நாவல்கள் பற்றிய விமர்சனங்களையும் எழுதியிருந்தார். 'அரியமலர்'என்ற நாவலுக்கு எழுதிய விமர்சனத்தில், கதாசிரியரின் தகைமையைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளதோடு, கதையின் தன்மையையும் வியந்து குறிப்பிட்டு, வாசகர்கள் மனதில் அந்த நாவலை வாசிக்கத்தூண்டும் வகையில் எழுதியிருந்தார்.*(சு.நா.26.10.1921)*

தமிழ் மொழியில் அதிக ஆர்வம் கொண்டிருந்த க.வே. தமிழகத்தின் சுவாமி வேதாசலம் அல்லது மறைமலைஅடிகள் மீது நட்புக் கொண்டிருந்தார். மறைமலையடிகள் யாழ்ப்பாணம் வந்து நிகழ்த்திய சொற்பொழிவுகள் பற்றியும். யாழ்ப்பாணத்தவர்களில் அவருக்கு இருந்த மதிப்புப் பற்றியும், அவரது கருத்துக்கள் யாழ்ப்பாணத்தில் பெற்ற வரவேற்பைப்பற்றியும், அவருக்கு எதிராக வெளியிடப்பட்ட கருத்துக்கள் பற்றியும் சுதேச நாட்டியத்தில் எழுதப்பட்டுள்ளது. க.வே. அவர் கீரிமலையில் தங்கியிருக்கிறார் எனவும் விரும்பியவர்கள் அவருடன் கலந்து பேசலாம் எனவும் குறிப்பிட்டிருந்தார். மறைமலையடிகள் யாழ்ப்பாணத்தில் நிகழ்த்திய உரைகள் பின்னர் 'தமிழர் நாகரிகம்' எனத்தலைப்பிட்டு நூலாக வெளிவந்தது என்பதும், அந்நூலைப் பிரசுரிப்பதற்கான செலவினைத் தென்கிழக்காசிய நாடுகளில் வாழ்ந்தவர் யாழ்ப்பாணத்தவர்கள் வழங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(வேதாசலம்,1957: 5-6 )

## சுதேச நாட்டியத்தில் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் பற்றிய தகவல்கள்

எந்த ஒரு விடயம் பற்றிய ஆய்விலும் அடிப்படையாக அமைவது பொருளாதாரம் என்பது எவருக்கும் உடன்பாடான விடயமாகும். இப்பிரதேசத்தின் பொருளாதாரம் பற்றிய விடயத்தில் அதிக அக்கறையுடன் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக்காண முடிகிறது. அப்பத்திரிகையின், முதலாவது பிரதியிலேயே 'யாழ்ப்பாணத்திற்கு வேண்டிய அவசியங்கள்', என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையில், அக்கால யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான பிரச்சினைகள் பற்றியும், அவற்றைத்தீர்ப்பதற்கு அவசியம் மேற்கொள்ளப்படவேண்டிய தீர்வுகள் பற்றியும் ஆராயப்பட்டுக் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவை யாழ்ப்பாணப்பொருளாதாரம் பற்றிச் சிந்திப்பவர்களுக்கு உதவியாக அமையக் கூடியவையாக உள்ளன.

> '...இந்நா டுநன்னாடாவதற்கு இனிவேண்டியவைக ளெவை யென்பதைக் குறித்துச் சிறிது சிந்திப்பாம்.
>
> 1). **புகையிரதம்**: வியாபாரத்தொழிலை மிகுதியும் நடாத்தல்வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி இடையறாது நடைபெறின், தடைபெறாது பணம் வருமென்பதிர்த்தர்க்கமின்று. பின்வரும் நயங்கள் பிசகாது நடைபெறும். நாநாவித பொருள் வரவுகளாலும், பண்டமாற்றாதிய புரியும்வழிகளாலும், ஏனையோராலும் விதந்து, வியந்துரைக்கப்படும், நாகரிகத்தையும், செழிப்பையும் வளர்பிறையொத்து வளர்ந்து வருமென்பதும் ஒன்று. ...'
>
> 2). **தண்ணீர்க்குழாய் திறத்தல்**: நம்தேயம் வடதேயங்களைப்போல யாறு குளமின்றி இருத்தலானும், அதனாலனேக நிலங்கள் சாகுபடி செய்தற்கு

வசதியின்றியிருத்தலானும், அவ்வ்விடங்களுக்கு நீர் பாய்ச்சும் வழிவகைகளைத் தேடல் ஒன்று.

கீழ்ப்பகுதிகளிலுள்ள கிணறுகள், குளங்கள், மணலிலிருந்து பொசிந்து வரும் சிற்றூ ற்றுகளாகவிருக்கின்றன. அத்தடாகங்களின் தண்ணீருஞ் சகதி, மரவேர் முதலிய பதார்த்தங்களை யள்ளிவருதலான் ஓர் வகைக் கந்தமும் ஊறிக் கொண்டிருக்கிறது. 'உண்டாற்றெரியுமுணவினுரிசி' என்பது போலப் பருகினாற்றெரியு மவ்விடத்தண்ணீர். அவை சுகத்தின் பாவிப்புக்குக் கூடியனவல்லவென்பது பிரத்தியட்சம். அவ்வகையிடங்களுக்குக் குழாய்களின்மூலந் தண்ணீர் அனுப்பப்படவேண்டியது ஒன்று. அந்நிலங்களிற் கற்பாறையிலிருந்து ஊறிவருந் தண்ணீரையுடைய ...

**3).கமத்தொழில்**: அனேகர் தங்கள் வாணாட்களை வீணாட்களாக்கிக் கஞ்சிக்கும் வழியற்று அலைந்து திரிகிறார்கள். அவ்வாறானவர்க்கு அவரவர் புரிதற்குத் தகுந்த கிரியை கொடுத்தல் வேண்டும். பலர் காணி பூமியற்றிருக்கின்றனர். அநேகர் குத்தகைக்கு நிலம் வாங்கிப் பயிரிடுகின்றனர். சில வேளைகளிலிவர்கள் வரும்படி குத்தகைக்காசுமெற் பற்றாமற் போகின்றது.

இவற்றிற்கு வேண்டியவை பின்னாற் சாற்றப்படும். தொழில் செய்வதற்குத் தகுதியான இடங்களை ஆராய்தெடுத்தலொன்று. அப்படித்தொழில் செய்யப்படும் நாடுகளுக்குக் கிட்டக் குடியேற்றலின்னொன்றாம். உத்தம பசளையை உண்டாக்கும் விதங்களை ஆராய்தெடுத்தல் வேறொன்று. இப்படி வருமானம் தரத்தக்க இடங்கள் தொகையாயிருப்பின் அவைகளுக்குக்கிட்டப் புகையிரதந் திறத்தல் பிறிதொன்று. கடற்கரைக்கணித்தாயுள்ள உவர் நிலங்களை மாற்றும் உபாய வழிகளைத் தேடல் அவசியமான மற்றொன்றாயிருக்கிறது.

**4).கைத்தொழில்**: யாழ்ப்பாணத்தில் அதிகமாய்க் கைத்தொழில் நடக்கிறதில்லை. சீலை நெசவு செய்கிறவர்களும் பானை, சட்டி உண்டாக்குகிறவர்களும் வேறு பலவேலை செய்கிறவர்களும் இடைக்கிடையே இருக்கின்றார்கள். யாழ்ப்பாணத்தினதிகவரும்படியாயுள்ள பொருள் புகையிலையே. அதைத் தட்டுப் புகையிலையாய் உலர்த்தலொன்று. இந்நாட்டிலிருந்து அதிகமாய்க் காலத்திற்குக் காலம் ஏற்றுமதியாகும்பனந்தும்பினால் அதிக வரும்படி தரத்தக்க உபாய வழிகளை உண்டாக்கல் இன்னொன்று.

இந்நாட்டிற்கு இறக்குமதியாகும் சாமான்களிற் பிரதானமானது சவளி வகையே. அவற்றை இங்கே தானே உண்டாக்கிறதற்கு வேண்டும் யந்திர வகைகளை உபயோகித்தல் அத்தியாவசியகமான மற்றொன்றாயிருக்கிறது.

**5).தமிழ்க்கல்வி உச்ச நிலைக்கு வரத்தக்க ஏதுக்களைச் செய்தல்**: தமிழ்ப்பாஷை யாழ்ப்பாணத்தில் குறைந்து குறைந்து வருகின்றது. தமிழில் நல்லாய்த் தேர்ச்சியடையும் பிள்ளைகள் மிகச் சொற்பம். இலக்கணம் வரவர அருகிப் போகினறது. சிலர் தமிழிற்சொற்பமேனும் படிப்பியாது பாலிய வயதில் தங்கள் பிள்ளைகளை இங்கிலிஷ் படிக்கிறதற்கு அனுப்புகிறார்கள் தன்சுயபாஷையைப்பற்றி யாதொன்றுந் தெரியாதவன் பகிடிக்காரனாவான். ...' *(சு.நா. 15.09.1902)*

இத்தகைய கருத்துக்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் க.வேயினால் குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் முக்கியமானதாக அமைகிறது. இக்காலத்தில் வேறு யாரேனும் இந்த அளவுக்கு யாழ்ப்பாணத்தின், பொருளாதார நிலை பற்றியும், இப்பிரதேசத்திற்கு வேண்டியவையாவை என்பது பற்றியும் முழுமையான, ஒரு கருத்தமைவினை வெளிப்படுத்தியதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் விவசாயத்தொழில் எதிர் கொண்ட மிக முக்கியமான பிரச்சினை நீர் வளமாகும். இங்கு வாழ்ந்த விவசாயிகள் மிகவும் பிரயத்தனப்பட்டு நீர் பாய்ச்சியே விவசாயம் செய்தனர். அக்காலத்தில் துலாவினால் நீர் இறைக்கும் பொறிமுறை மட்டுமே அறியப்பட்டுப் பயிலப்பட்டு வந்தது. 1910ஆம் ஆண்டளவில் சூத்திரம் என்ற பொறிமுறை, மலாயாவில் தொழில் பெற்றுச் சென்ற ஒருவரால் யாழ்ப்பாணத்திற்குக்

கொண்டுவரப்பட்டது. அப்பொறிமுறை பற்றி வியந்தும், அதனை யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்தவரைப்பாராட்டியும் எழுதியிருந்தார்.

'...இவ்வியந்திரத்தைச் சோதனை பார்க்கும் நோக்கமாக, சென்ற 1905ஆம் வரு தைமீ 13உ யன்று நம்மேசன்றுத் துரையாதியாம் பலர் சமூகத்தில் ஓர் கிணற்றிலிட்டு இறைத்துப் பார்த்தனர். ... இவ்வியந்திரத்தைக் கொண்டு நாள்வீதம் முன்னேரம் பின்னேரமாகிய இரு நேரங்களிலும், 40 பரப்பு நிலத்தை மிக லேசாகவும் சுகமாகவும் இரு மாடுகளைக் கொண்டு இருவர் நீர் பாய்ச்சக்கூடும். ... இறை கூடையினால் நாட்டுப்பகுதியிலுள்ளார் இறைத்து நீர் பாய்ச்சுவது மெத்தக் கஷ்டமான காரியம். மூன்று பேர் துலா மிதிக்கவும், ஒருவர் தண்ணீரிறைக்கவும், இன்னொருவர் தண்ணீர் மாறவும் வேண்டும். இப்படி நீர் பாய்ச்சும் ஐவரும் ஆளுக்கு (த) ஆயிரம் கன்றுத் தறைக்கு மேல் பயிரிட்டு இறைத்துக் கொள்வதும் கூடாதகாரியம். இவ்வியந்திரத்தினால் இருமாடுகளினுதவியைக் கொண்டு எரு அணி முதலுள்ளவர்கள் ஆளுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் கன்றுத்தறையைப் பயிரிட்டுச் செய்து கொள்வது மெத்தச்சுகமான காரியமும் நல்ல வருமானம் வருவதற்கு இடமுமாயிருக்கும். ...' *(சு.நா.11.03.1907)*

க.வே. சிறையில் இருந்த போது, வெளிவந்த பத்திரிகையொன்றின் தகவல் :

'... இவர் நடத்த முயன்ற **கிருஷிக வித்தியாசாலையால்** நன்கு விளங்கும். இவ்வித்தியாசாலைக்கு பெருந்தொகையான நிலத்தையும் வாங்கி மிகவும் தீவிரமாயும் வேகமாயுந் தண்ணீர் பாய்ச்சக்கூடிய யந்திரமொன்றையுந் தருவித்து, வித்தியாசாலை ஸ்தாபனஞ் செய்யுந் தருணத்தில் ...' *(குருசந்திரோதயம் 25.05.1911)*

என்று காணப்படுவதால், க.வே. யாழ்ப்பாண விவசாய வளர்ச்சியில் கொண்டிருந்த அக்கறை தெரிகின்றது. அதாவது விவசாய வளர்ச்சியின் பொருட்டு செயன் முறை அறிவை மேம்படுத்தும் வகையில் விவசாயக்கல்விச்சாலை ஒன்றை நிறுவ ஆயத்தம் செய்திருந்தார்.

விவசாயத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த, க.வே. விவசாயிகளுக்கான பத்து விடயங்கள் அடங்கிய குறிப்பொன்றை எழுதி வெளியிட்டிருந்தார்.

பத்து விவசாயக் கற்பனைகள் :--- நல்ல தானியங்களைப் பெற வேண்டுமானால் பின்வருவனவற்றைச் செய்க. 1). ஆழமாய் உழு. 2). மேல் நிலத்தைக் கட்டியில்லாமற் தட்டிவை. 3). பூமியைச்சமமாய்த்தடடு. 3). முழையில்லாக்காலத்தில் நிலத்தைச் சும்மா விட்டு வை. 5). சமயத்தில் நிலத்திற்கு எருவடி. 6). புல், பூண்டுகளைக் களையெடுத்து விடு. 7). சீக்கிரம் அறுவடையாகக்கூடிய தானியங்களை நடு. 8). பச்சைத்தழையை அடி. 9). ஆடு, மாடுகளை வைத்துக்கொள். 10). ஒரு தடவை நட்ட பயிரை அடுத்த வருஷத்தில் நடாதே. இந்தக் கட்டளைகளை ஒரு புத்திமான் இடுகிறார். *(சு.நா. 18.08.1911).*

விவசாயத்தில் மட்டுமன்றி ஏனைய தொழிற்றுறைகளின் வளர்ச்சியிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது. யாழ்ப்பாணத்தில் வளர்ச்சி பெற்றிருந்த தொழிற்றுறைகளில் சுருட்டுத் தொழில் பிரதானமாகும். அக்காலத்தில் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருக்கக்கூடிய சுருட்டுக்களின் எண்ணிக்கையை சுதேச நாட்டியத்தில் இடம் பெற்றிருந்த மேல் வரும் செய்தி காட்டுகின்றது.

**'இது நூதனமா?** கொழும்பு 'முஸ்லிம் நேசன்' பத்திரிகையில் லண்டனில் நாளொன்றுக்கு ஒரு லட்சம் சுருட்டு செலவழிகிறதாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. நமது நண்பர் கொழும்பில் நாளொன்றுக்கு பதினைந்து லட்சம் யாழ்ப்பாணச்சுருட்டுகள் செலவழிந்து போவதை இன்னும் அறியவில்லைப்போலே. சீக்கரற்று, மனிலா, தும்பறை, யாவா, திண்டுக்கல், திருச்சினாப்பளி, நீர்கொழும்பு முதலிய பலசாதிச்சுருட்டுக்களையும் சேர்த்துக் கணக்கிடில் நாளொன்றுக்கு இருபத்தைந்து லட்சம் சுருட்டுகள் வரையிற் செலவழிகிறதாமே. ...' *( சு.நா. 9.1.1903)*

அத்துடன் 1911இல் இடம் பெற்ற சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி எழுதிய. க.வே. அது பற்றிய செய்திக்கு, **'சுருட்டுக்காரர் முரட்டுத்தனம்'** என்ற தலைப்பிட்டு எழுதியிருந்ததுடன், அவர்கள்

ஒற்றுமையாகச் செயற்பட்டதால் தம் கோரிக்கையில் வெற்றி பெற்றார்கள் எனவும் கருத்துக் கூறியிருந்தார்.*( சு.நா. 20.03.1911).*

## அரசியல்விடயங்களில் க.வே. யும் சுதேச நாட்டியமும்

சுதேச நாட்டியம் பத்திரிகை வெளிவந்த நீண்ட காலப் பகுதி (1902-1944) அரசியலில், பல்வேறு மாற்றங்கள் விரைவாக ஏற்பட்ட காலமாக அமைகிறது. இக்காலப்பகுதிக்குரிய அரசியல் வரலாறு, பகுப்பாய்வு செய்யப்படாதநிலையில், தனிநபர் பத்திரிகையாளர் ஒருவரின் அரசியல் நிலைப்பாட்டினைத் தெளிவாகக் குறிப்பிடுவது, முடியாத காரியமாகும். எனினும், அவரது பத்திரிகையின், ஆரம்பகாலத்தில் அரசியலுடன் தொடர்பான விடயங்கள் பற்றிய சில எடுத்துக்காட்டுக்களைப்பற்றிக் குறிப்பிடலாம். பிரித்தானிய காலனித்துவத்தின் கீழான யாழ்ப்பாணத்தவர் மத்தியில் காணப்பட்ட, அரச விசுவாசம், பிரித்தானியரின் ஆட்சி தமக்குக்கிடைத்தமை வரப்பிரசாதம் என்ற எண்ணம், பிரித்தானிய காலனித்துவ அலுவலர்களையும், அவர்களது நடவடிக்கைகளையும் சிலாகித்தல் ஆகிய பண்புகளை இவரது பத்திரிகைக் குறிப்புரைகள் காட்டுகின்றன. அவற்றிற்கு உதாரணங்களாகப் பின்வரும் தரவுகளைக் காட்டலாம்.

> **டில்லி தர்பார்** – '... தர்பார் என்பது சமூகமளித்தல் : அல்லது வணக்கஞ் செலுத்துதல் என்னும் பொருள் பொதியப் பெற்ற பார்சிய பாஷைப்பதம். **பிரித்தானிய அரசர் நமது வணக்கத்திற்குரிய இராச சக்கரவர்த்தி** என்னும் மதிப்பைக்காட்டும் நோக்கத்திற்காகவே, இந்திய இராச்சியத்தவர் இந்தக் கொண்டாட்டத்தை வழமையாய் நடப்பித்து வருகின்றனர். ... இந்தியாவிலே தர்பார் முதன்முதலில் **லிற்றன் பெருமான்** பிரதிகாவலராயிருந்த போது 1877 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது விக்ரோறியா மகாராணியவர்கள், இந்திய சக்கரவர்த்தினியெனக் கூறப்பட்டார்கள்....' *(சு.நா. 18.12.1911)*
>
> **ஏசன்றரின் சுற்றோட்ட நிருபம்** - வட மாகாண ஏசண்டராய் **தன்னுயிர் போல் மன்னுயிரோம்பும் சுகுண லட்சணங்களமைந்து, தாரகாகணச்சந்திரனெனத்துலங்கி** யாழ்ப்பாணத்தார் மத்தியில் விளங்கும் **எங்கள்ஏசன்றர் கனம் பிறீமன் துரையவர்கள்** யாழ்ப்பாணக் கிருஷிகவிஷயமாய் மணியகாரன்மாருக்கு அறிக்கை செய்திருக்கினறனர். அதில் யாழ்ப்பாணப் புகையிலயிலதிகம் மலையாளப்பகுதிக்குத் தேவையில்லாதிருப்பதால், இனி யாழ்ப்பாணத்திலே புகையிலையை அதிகமாக உண்டாக்கல் புத்தியல்லவென எச்சரித்து, அந்நிலங்களில் வேறேதும் பலன்தரும் பயிர்களை கமக்காரர் செய்தல் உத்தமமெனக் காட்டியிருக்கின்றனர். **என்ன தண்ணளி.!** *(சு,நா. 18.08.1911)*

எனினும் அரசாட்சியாரின் செயற்பாடுகள் சில, மக்களுக்குப் பாதகமானதாக இருப்பதை இவர் தனது பத்திரிகையில் சுட்டிக்காட்டி எழுதுவதற்கும் தயங்கவில்லை. க.வேயின் இயல்பான எள்ளல் கலந்தவகையில் எழுதப்பட்ட பின்வரும் பகுதியை நோகக்கலாம்.

> 'ரயில் வண்டிகளிலே 3ஆம் வகுப்பாருக்கு அமைக்கப்பட்டிருக்கும் பெட்டிகளிலே மேற்பலகைகளில் 12 சனங்களுக்கு என்றெழுதி...சனங்களதிகப்படும் போது அரசாட்சியார் லாபம் போய்விடுமென்று நெருப்புப் பெட்டிக்குள் குச்சடுக்கிய விதமாய், பெயரப்பிரிய, மூச்சுவிட, வசதியின்றிச் சனங்களை இழுத்துப் போட்டு அடைத்துவிடுகிறாரென்றும், 1-ம்,2-ம்.வகுப்பு வண்டியிலிருக்கிறவர்களை மனுஷரென்றும், 3-ம் வகுப்பு வண்டியிலிருக்கிறவர்களை, மரந்தடிகள் அல்லது மிருகங்களென்றும் அரசாட்சியுத்தியோகரெண்ணியிருக்கிறார்களென்றும் ஒருவர் வினவுகிறார்.
>
> றையில் வண்டியில் 1-ம்,2-ம் வகுப்பு வண்டியிலேறுகிறவர்களுக்கு மலசலங்கழிக்க இடம் அமைக்கப்பட்டிருக்கிறதென்றும், 3-வது வகுப்பு வண்டியில் ஏறுகிறவர்களுக்கு அப்படியமைக்கப்படவில்லையென்றும், இவர்களுக்கு அப்படியொன்றை அமைத்து விடாததால் இவர்களை மலசலமில்லாத மலமுத்தர் என்று அரசாட்சியாரெண்ணியிருக்கவேணுமென்றும் ஒருவர் சொல்ல, அதற்குத்தரமாய் வேறொருவர் ஓ! ஸ்றேசன்கள் ஒவ்வொன்றிலும் புகைரதப் பயணக்காரருக்காயல்லவா கக்கூசுகள் கட்டப்பட்டிருக்கிறது மூன்றாம் வகுப்புக்காரர்

அங்கேயிறங்கியிருக்கலாமேயென்க: முந்தியவர் இவர் கூறியதை மறுத்து மூன்றாம் வகுப்பார் போல் முதலாம் இரண்டாம் வகுப்பாரும் இறங்கி அப்படிக்கக்கூசுகளில் மலசலங்கழிக்கில் இவர்களுக்கு மலசலம் போகாதா? இரண்டு ஸ்றேசனுக்குமிடையில் மூன்றாம் வகுப்பில் இருக்கிறவர்களுக்குக் காத்திராதபடி மலசல வேதையுண்டுபட்டால், அவர்கள் கட்டியிருக்குஞ் சால்வை வேட்டிகளில்கழித்து, வெளியில் வீசுகிறதா என்று பரிகாசம் பண்ணுகிறார்'. *(சு.நா.12.07.1909)*

பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்தைக் கௌரவமாகக் கருதியிருந்த, யாழ்ப்பாணத்தவர், பிரித்தானிய கீழ்நிலைப் பதவி வகித்தவர்களையெல்லாம் மதிக்கவும் மரியாதை செய்யவும் உடன்பட்டார்கள் எனக்குறிப்பிட முடியாது. இதற்குப் பலசான்றுகளைக்காண முடியும். க.வே.யும் அத்தகைய ஒரு சம்பவத்தை எழுதிக் கிண்டல் செய்திருப்பதைக் காண முடிகிறது. **'வெள்ளைத்தோலுக்கு (சேர்) பட்டம் வேண்டுமாம்!'** என்ற தலைப்பில், எழுதப்பட்டிருந்த சம்பவக்குறிப்பு இதற்குச் சிறந்த உதாரணமாக அமைகிறது. கல்லடியானின் இந்தச் செய்தியில் வெள்ளையர்களின் மேலாதிக்க எண்ணத்தைச் சகிக்க மாட்டாத ஆவேசம் தென்படுகிறது. *( சு.நா 1.06.1908)*

## சுதேச நாட்டியமும் அக்கால சமூகமும்

சமயத்துறையில் நடுநிலை கைக்கொள்ள முற்பட்ட கல்லடியான், சமூக விடயங்களில் ஆக்ரோஷம் மிக்க பார்வையைக் கொண்டவராக விளங்கியிருந்தார். சமூகம் பற்றிய அவரது கருத்து நிலை சமூக உயர்வகுப்பாரின் போலித்தனங்களுக்கு எதிரானதாகவும், நீதி, நேர்மை, தயவு, தாராண்மைஆகியவற்றை வலியுறுத்தல் என்பதாகவும் வைதிக சமூக அடிப்படையை வலியுறுத்துவதாகவும் உள்ளது. இதனைச் சற்று விளக்கிக் கூறுவதாயின் யாழ்ப்பாணச் சமூகத்தில் இருந்த அதிகார அந்தஸ்துப் படிமுறையைத் தொடர்ந்து பேணிவலுப்படுத்துதல் என்ற நிலைப்பாடே அவரின் கருத்தாக இருந்தது. அதிக தாராண்மைவாத கல்விப்பயிற்சி நெறியைப் பெற்றுக் கொள்ளாத க.வே. அக்காலத்தில் ஆங்கிலக்கல்வி பெற்றவர்கள் அறியக்கூடியதாயிருந்த தாராண்மைவாத சிந்தனை அடிப்படைகளான சுதந்திரம், தனிநபர்களாகச்சட்டத்தின் முன் சமத்துவம்பெறுதல், அனைவரையும் சமத்துவமுடையவர்காகக் கருதுதல் ஆகிய விடயங்களை ஏற்றுக் கொண்டவராக இருக்கவில்லை. ஆனால் அடிப்படையான இரக்கம், அன்பு, நட்பு, பாசம், விசுவாசம், கடவுள் மீதான பக்தி, மூடநம்பிக்கையாகச் சொல்லப்படும் கனவு, சகுனம், சோதிடத்தில் நம்பிக்கை, சாமுத்திரிகாலட்சணங்களை ஏற்றல், ஆகியற்றை ஏற்று முழுதாக நம்புகின்ற போக்கினைக் காண முடியும். அக்கால சமூகத்தைப்பற்றிய அவரது நோக்கு நிலையை பின்வரும் பகுதி நன்றாக விளக்குகின்றது.

'யாழ்ப்பாணத்திலேயுள்ள ஒவ்வொருவரும் தன்னை யோக்கியன் என்றும், உயர்ந்த சாதிக்காரனென்றும் சாமர்த்தியமாய்ப் பேசி வாயடிக்கிறதை நாம் காண்கிறேம். உள்ளபடி நாம் அவர்களின் யோக்கியதையையும், சாதியையும் எடுத்து வெளியிடக்கூடுமாயின், அவரை மதித்து, அவர் சுகம் பெறுவார்க்குச் சத்துருவாய் விடுவதுமன்றி, 'மான நட்டம்' என்ற ஓர் வழக்கிலும் எதிரியாகி : எமது பத்திரிகையையும் கெட்ட பத்திரிகையென்று பிறர் நிந்திக்கச் செய்கிறதாய் முடியும். "பசுத்தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்கிற" இவர்களை நாம் முகமனுக்கு...'*(சு.நா. 15.09.1902)*

முதலாவது பத்திரிகைப்பிரதியிலேயே இவ்வாறு வெளிப்படையாகத் தமது கருத்தினை முன்வைக்கின்றார். முன்னர் சுட்டிக்காட்டியது போன்ற புதிய சமூக உருவாக்கத்தின் பண்புகளைப் புலப்படுத்தும் தன்மை கொண்டவையாகவும் இதனை நாம்விளங்கிக் கொள்ள முடியும். தொடர்ந்து அவர் குறிப்பிடும் பகுதி மேலும் இக்கருத்தைவலியுறுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது. இப்புதிய வகுப்பினரில் பெரும்பாலானவர்கள், முன்னேற்றம் பெறுவதற்கு உதவிய பாதையைத்தேடிக் காட்டும் கல்லடியானின் விமர்சனம் .எமக்குப் பலவிடயங்களைப் புரிய வைக்கினறது. பிற்காலத்தில் சிங்களத் தலைவர்கள் கிறிஸ்தவத்தைக்கைவிட்டு, பௌத்த மதத்திற்கு மாறியது( அவர்களை டொனமூர் பௌத்தர்கள்

என்பர்) போன்று நம்மவர்களும் ஒரு போது கிறிஸ்தவத்தில் இருந்து, சைவத்திற்கு மாற வேண்டியுள்ளவர்களாக இருந்துள்ளனர் அல்லவா?

> 'பாதிரிமார், கத்தோலிக்ககுருமார்,... கற்று, அவர்கள் சோற்றையுண்டு, அவர்களிடத்திலே நாகரிகம் பயின்று, அவர்கள் மார்க்கத்திலே சில நாளேனும் நின்று, மோசே, மேவின், உவின்சிலோ, பேசின், மெக்கின்றையர், கிங்ஸ்பரி, காரல், ஐஸ்பரி, நெவின்ஸ், சினேல், பற்றேஷன் என்பது போலும் பெயர்களைத் தரிக்கப்பெற்று, பின் உத்தியோகங்களிலமர்ந்து, பின் பழைய பெயர்களை மாற்றிச் சந்திரசேகரம், விசுவநாதபிள்ளை, சிதம்பரப்பிள்ளை, தாமோதரம்பிள்ளை என்பது போலும் பெயர்களைத் தரித்துக்கொண்டு நாங்களே பத்தியுள்ள சைவசமயிகளெண்டிருப்பவரையும் : இவர்கள் மக்கள் மருமக்கள், சகோதரர், மாமன்மார், மைத்துனர், பேரன், பீட்டன்மாரையும், ஒக்கலாயுள்ளவரையும் விட : தற்காலத்திலொருவர் இவ்வுரிமையிற் சிறிதுந் தொடாத சைவசமயி, செல்வன், பிரபு என்றிருக்கின்றாரா? அவ்வாறொருவர் இருப்பாராயின் அவரையன்றோ பரம்பரை யோக்கியன், சாதிமான், சைவசமயப்பிரபு, சீர்திருத்தமுள்ளவர்என்பது தகுதியாகும்.' *(சு.நா. 15.09.1902)*

இது மட்டுமன்றிச் சமூகத்தில் முதன்மை நிலை பெற எத்தனித்தவர்களின் நன்றிக்குறைவான செய்கையென மேற்படி விடயத்தைச் சுட்டிக்காட்டுவதையும் அவதானிக்கலாம்.

சுதேச நாட்டியம் இரண்டாவதாக வெளியிடப்பட்ட பத்திரிகைப் பிரதியில் '***வேளாளர் சூத்திரரல்ல***' என்ற தலைப்பில் கட்டுரையொன்றின் முதற்பகுதி காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாதி பற்றிய பிரச்சினை மிக முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது. இங்கு பத்திரிகைக்காரர் புதிய கருத்தொன்றை நிறுவ முற்படுவதைக்காணலாம். நால் வர்ணக் கோட்பாட்டின்படி, வேளாளர் சூத்திரர் என்றும் சில வேளைகளில் அதனை விசேடித்து சற்சூத்திரர் என்றும் பேசப்பட்டு வந்தது. இப் பொழுது நிகண்டை ஆதாரமாகக் காட்டி வேளாளர் தொழில் அடிப்படையில் வேளாண்மை செய்தமையால் வந்த பெயரென்றும், அவர்கள் தொழில், கடமை ஆகியவற்றின் அடிப்படையில் வைசியர் என்றே கொள்ளப்படக்கூடியவர் என்றும் இப் பத்திரிகை கூறுகிறது.

> 'பிரம, சஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் நால்வகை வருணக்கிரமப்படி இந்துக்களை வகுக்கத் தொடங்கியதில் வேளாளரைச்சூத்திரரிற் சேர்த்திருப்பது தகுதிக்குறைவும் நியாய விரோதமுமாக இருக்கிறது.'
>
> 'இந்நாற்பாலாருள் வேளாளர் எனப்படுவோர் எப்பாலாரைச் சேர்ந்தவரென நாம் தீர்மானிக்க வேண்டியது அவசியமென்றே சில தாஷ்டாந்த திருஷ்டாந்தங்களைக் கொண்டு ஈண்டதைச் சாதித்துத் தீர்மானிக்க முயன்றனம்.' *(சு.நா.29 புரட்டாதி 1902)*

இக்கருத்துக்களைப்பார்க்கும்போது, சாதிவரையறை பற்றிய பலவகையான கருத்துநிலைகள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் முன்வைக்கப்ட்டிருப்பதையும், அதுவே அக்காலத்தில பிரதான கருப் பொருளாக இருந்தது என்பதை ஊகிக்க முடிகிறது. சாதிபற்றிய விடயத்தில் வேதங்களை அடிப்படையாகக் கொண்ட நால்வருணத்துள் வேளாளரை எங்கே வைப்பது என்பது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. ஆறுமுக நாவலர் போன்றோர் இவர்களை சூத்திரருள் அடக்குவதற்கு உடன்பட்டு அவாகளைச்சிறப்பிக்கும் நோக்கில் சற்சூத்திரர் எனச்சுட்டினர். இங்கு வேளாளரை வைசியராக அடையாளம் காணுகிறார்.

சமூகத்தில் நிலைபெற்றிருந்த அதிகாரப்படிநிலையை ஏற்றுக் கொள்ளும் போக்கினைக் கொண்டதாக க.வே காணப்பட்டார் என்பதை முன்னரே காடடியிருந்தோம். 1900 ஆம் ஆண்டுக் காலத்தில் இருந்து சமூக நெருக்கடிகள் யாழ்ப்பாணத்தில் மேலோங்கியிருந்தன. சிறப்பாக பொருளாதார, சமூக அந்தஸ்தில் அடிநிலைப்பட்டிருந்த மக்கள் மேல் மட்டத்தில் இருந்தவர்களுடன் சமநிலைக்கு வருவதற்கான நிலையும், தமக்கு நிராகரிக்கப்பட்டிருந்த பலவிடயங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எத்தனிப்பதையும் காணலாம். இது, சமூகத்தின் சிலகுறிப்பிட்ட பகுதியினரால் எதிர்க்கப்பட்டது. இதுவரை அரசாங்கம் பின்பற்றி வந்த பழமைபேணும் கொள்கையும் மாற்றம்கொள்ளத் தொடங்கியது. இதனால் சமூக முரண்பாடுகள் வன்முறைக்குச் செல்லும் போக்கைக் கொள்ளும் வகையில் மாற்றமடைந்தது. இவ்வேளையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச்சார்பான அணி, எதிரான அணி எனச் சமூகம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அணிகளாகப் பிளவு பட்டது. அவ்வேளையில், 'தீண்டாமை ஒழிப்பு' என்ற கருத்தோட்டமும், முனைப்புப் பெறத் தொடங்கியது. அதற்கான வழிமுறைகளாகச்,'சமாசனம்','சமபந்தி போசனம்', ஆலயப்பிரவேசம்' ஆகியவிடயங்களும் அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுக்கும் முயற்சிகளும் இடம் பெற்றன. இதனால் சமூ

கத்தில் வன்முறைகளும் ஏற்பட்டன. ( இக் காலச்சமூகப் பிரச்சினைகள் பற்றிய தனியான ஆய்வு செய்யுமிடத்து பலவிடயங்கள் மேலதிக விளக்கத்திற்கு உதவியாக அமையும்) இவ்வேளையில் க.வே எழுதிய பத்திரிகை விடயங்களும், இவைபற்றிய சர்ச்சைகள் பற்றியனவாக இருந்தன. அவர் இந்தியாவில் இடம்பெற்ற சம்பவங்களை மேற்கோளாகக்காட்டினார். அதில் கவனத்தைப் பெறக்கூடிய ஒரு பகுதியாக பின்வரும் விடயம் காணப்படுகின்றது.

**தீண்டாமை பற்றி டாக்டர் அம்பேட்கார் :** '... தீண்டாதார்களை ஆலயங்களில் அனுமதிக்க வேண்டுமென்ற ஒரு அற்ப காரணத்திற்காக காந்திஜி தமது உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடிய உண்ணாவிரதத்தை மேற்கொள்வது சரியன்று. ஆலயங்களில் பிரவேசித்து விடுவதால் தீண்டாதார்கள் பொருளாதாரத்துறையிலும் சமூகத்துறையிலும் முன்னேற்றமடைந்து விடமாட்டார்கள் என்பதே என்னுடைய அபிப்பிராயமாகும். ஆகவே ஆலயங்களில் அனுமதிக்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் எந்த முயற்சிகளும் தீண்டாதார்களின் சீர்திருத்த மார்க்கங்களில் சம்பந்தப்பட்டவையல்ல.இதர சமூகத்துறைகளில் சாதிஹிந்துக்களுடன் தங்களுக்குச் சம உரிமைகள் கொடுக்கப்பட்டு விட்டால் தீண்டாதார்கள் தங்களை ஆலயங்களில் அனுமதிக்கவேண்டும் என்பதைக்கூட விட்டுவிடுவார்கள். ஆதலால் தீண்டாமை ஒழிப்பில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் காந்திஜியும் அவரது காங்கிரஸ் சகாக்களும் இதர முக்கியமான துறைகளில் தீண்டாதார்கள் சாதி ஹிந்துக்களைப்போல் சம உரிமைகள் பெறும் பொருட்டு உழைக்கவேண்டியதவசியமாகும்.' *( சு.நா. 16.11.1932)*

சமூகம் சார்ந்த விடயங்களில் க.வே. சமூக சமத்துவத்தை விரும்பியவராக இருந்தார் எனக் கூற முடியாது. ஆனால் மறைமலையடிகளின் சிந்தனைகளின் தாக்கம் இவரது மனதில் செல்வாக்குச் செலுத்தியதா என்பதையும் உறுதியாகக் குறிப்பிட முடியாதுள்ளது.

சமூகத்தின் முக்கிய பகுதியினரான, பெண்கள் பற்றிய இக்காலப் பத்திரிகைகளின் கண்ணோட்டமும், க.வே யின் கண்ணோட்டமும் ஏறக்குறைய ஒரே தன்மைத்தானவையே. பெண்களின் கல்வியை ஏற்றுக் கொள்கின்ற அதே வேளையில், குடும்பப் பெண்கள் இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்ற வரையறையில் சில கருத்துக்களை வைத்திருந்து, அந்தச்சட்டகத்தின் வழியே பெண்களைப்பார்க்கும் போக்கு அதிகம் இடம் பெறுவதைக் காணலாம். இவர் எழுதிய பின் வரும்பகுதியைப் பார்க்கின் அது தெள்ளிதிற் புலப்படும்.

**குணமற்ற மனையாள்:** அன்னை தந்தையரில்லாதாள், கிளையில்லாதாள், திருவில்லாதாள், குடிப்பிறவாதாள், நேர்மையற்ற பெற்றாரிடம் பிறந்தவள், நோய்க்காரி, ஊமை, செவிடி, முடத்தி, பிறர் வீடு செல்பவள், கணிகையர் மேற்பார்ப்பவள், ஆடவரைக்காணுமாசையாற் கடைத்தலைசெல்பவள், அலங்காரத்திற்பிரீதியுள்ளவள், கடைக்கண்காரி, சிறுகண்காரி, நெடுமூக்கி, ஓயாமலுண்பவள், நித்திரைக்காரி, வயதிற்கு மூத்தவள், நெடுமி, குறளி, அதிகம் பெருத்தவள், மிக மெலிந்தவள், பொன்போலுங்காயத்தாள், கருநிறத்தாள், பசப்பினள், வெளுப்பினள், நாணம்,மடம், 'அச்சம், பயிர்ப்பில்லாதாள், நரைமயிரி, மிகுந்த பலசாலி, பெற்றோர் அணை கடப்பவள், சினத்தி, அன்ன நடையில்லாள், விரநிலத்திற்படர்ந்தாள், கூத்துப்பிரியை, தெய்வபயமில்லாள், குருவையிகழ்பவள், உயிர் நேசமிலாள், இடிபோல விலங்கு போல உரத்துப்பேசுபவள், பெற்றவர் குறிக்கமுன் ஒருவர் பால் மனப்பற்று வைப்பவள், மறுவுள்ள முகத்தினள், கூசுகண்ணினள், சாய்ந்த பார்வைக்காரி, பூனைக்கண்ணாள், செங்கண்ணாள், செம்மயிரி, நிலம்படுகைசத்தினள், குறுஞ்செவியினள், உயர்ந்த பல்லினள், வாய்,நகம், கை, உள்ளடிசில்லாதவள், இடைசிறிதாயிராதவள்,சீறுபீறான குணக்காரி, தன்வீடுவிட்டு அடிக்கடி தாய்வீடும், அயல்வீடும் நோக்கித் திரியும் தொழிற்காரி, இப்பெயர்ப்பட்டார் இல்வாழ்க்கைக்கு தகாதவராம். *(சு.நா.11.03.1907)*

வேறுமொரு முக்கியமான விடயம், யாழ்ப்பாண சமூகத்தில் பயிலப்பட்டு வருவதும், இவருடைய பத்திரிகைகளில் கையாளப்பட்டிருப்பதுமாக அமைவது, பெண்கள் தமது மக்கள், கணவன் ஆகியோர் செய்யும் குற்றங்களுக்கு, அல்லது, தம்முடன் சம்பந்தமில்லாத இடங்களிலெல்லாம் பழிப்பிற்கும், தூஷனைக்கும் உட்படுத்தப்படுவதாகும்.

உதாரணமாக ஒருவன் செய்யும் பாவ காரியத்தைத் தூஷிக்கும் போது 'இவள் மகன்' என தாய் தூஷனைக்கு உட்படுத்தப்படுவதாகும். இங்கு தாயைப் பழிப்பது ஒரு மகனை வளர்ப்பதில் தாயின் பங்கே உண்மையானது என்பது பெறப்படுமெனக்கூறினும், தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவு நெருக்கத்தைப் பயன்படுத்தி சமூக அங்கத்தவர் ஒருவரைக்கட்டுப்படுத்தல் சாத்தியமாக இருந்திருக்கும் என வாதிட முடியமெனக் கூறினும், பெண்கள் என்ற வகையில் சம்பந்தப்படாத விடயத்தில் பழிப்பிற்கு ஆட்படுத்தப்படல் நியாயமற்ற செய்கையாகவே உள்ளது. இத்தகைய அஸ்திரப்பிரயோகம் யாரும் பயன்படுத்தக் கூடியது என்பதும் கவனிக்கப்படுவதில்லை. ஏனெனில் எல்லோருக்கும் தாய்மார் உளரல்லவா?. இத்தகைய அஸ்திரத்தை க.வே. பலஇடங்களில் பயன்படுத்தியிருப்பதைக் காணலாம். இதற்கு இவ்ஆசிரியர் ஆதாரம் காட்டப் போவதில்லை. விரும்பியோர் அவரது பத்திரிகைகளைப் பார்க்கலாம்.

## யாழ்ப்பாணத்தில் நிகழந்த கலை பொழுது போக்கு நடவடிக்கைகள் பற்றிய க.வே.யின் கண்ணோட்டமும் தகவல்களும

யாழ்ப்பாணத்தின் கலைப் பாரம்பரியம் பொழுது போக்குகள் பற்றிய செய்திகள் மிகவும் முக்கியமானவையாகவும் வியப்பிற்குரியவையாகவும் உள்ளன. யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற கலைப்படைப்புக்களுள் சிலவற்றைப் பற்றியும், கலைஞர் ஒருவரைப்பற்றியும் கிடைத்துள்ள விடயம் ஆர்வமூட்டுவதாயுள்ளது. அச்செய்திகள் சிறு துணுக்குகளாக இருப்பதால் அவற்றை முழுமையாகப் பதிவது சிறந்ததாக அமையும். :

> **கோண்டாவில் மகா M. துரைசாமி** :யாழ்ப்பாணத்தில் கைச்சித்திர வேலையில் அதிக நிபுணரென்று உயர்தரப் பிரபுக்கள், துரைமக்களால் மிக விதந்து பாராட்டப்பட்ட மேற்படி துரைச்சாமி யென்பவர் தமது கைச்சித்திரத்தின் சாமர்த்தியத்தைக் காட்டுமாறுமிகப் பிரமிக்கத் தக்க பொம்மைகளைச் செய்து நடன சபா கொண்டாட நியமித்திருக்கிறார். இவர் வேலையைக் கண்ணுற்றார் பிரமியாது போகார். இவர் முயற்சிக்காக பிரபுக்கள் விவேகிகள் உதவி செய்து இவரைத் தளர்ச்சியடையாது உற்சாகப்படுத்துவார்களென்று நம்புகிறோம். (*சு.நா.*23.01.1905) **பிரதிமைச் சுப்பிறீங்கோடு**: –கோண்டாவில் ஸ்ரீ.மு. துரைச்சாமிப்பிள்ளையென்னும் சித்திர வேலைக்காரரால் வரும் ஆவணி மீ தமிழுக்கு 7உ துவங்கி எட்டு நாள் வரையுமம் நடத்தப்படும். இதில் நீதவான், நியாய துரந்தரர், வழக்காளிகள், எதிரிகள், சாட்சிக்காரர்கள், தலைமைக்காரர் ஆதிய ஏனையோரும், பதுமைகளாலேயே நடத்துவிக்கப்படும். இது நம்யாழ்ப்பாணத்தில் எப்போதாவது கண்டிராநூதனமும் வேடிக்கையுமாயிருக்குமென்பது எம் சித்தாந்தம். நம் நண்பராகிய பிள்ளையின் அபிப்பிராயம் தாம் நடத்தவிருக்கும் இந்நூதனக்காட்சியை வந்து பார்த்து அதன் அருமைக்குப் பெறுபேறாய் ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி செய்து, தம்மையும் தம்முயற்சியையும் ஊக்கப்படுத்திவிடுங்கள் என்பதே.*( சு.நா.30.07.1906)*

இச்சித்திரக்கலைஞர் ஆக்கிய மேலும் சில படைப்புக்கள் பற்றிய செய்தியில், 'யாழ்ப்பாணத்தில் இருந்த செட்டிக்கடை வீதியில், காங்கேசன்றுறைத் துறைமுகம், பருத்தித்துறைத் துறைமுகம், ஊர்காவற்றுறைத் துறைமுகம், அலுப்பாந்தி, மண்டைதீவு அகியவற்றைச்சித்திரமாகத் தீட்டியிருந்தார்' எனக்குறிப்பிட்டுள்ளார். இவற்றை யாழ்ப்பாண ஏசன்ரர் பார்த்துப் பாராட்டினார் எனவும், செட்டிமார்கள் இவற்றுக்குப்பரிசாக தங்கத்தினால் செய்யப்பட்ட பலமோதிரங்களை வழங்கியிருந்தனர் எனவும் கூறியுள்ளார். இவை வெகு வினோதமான சித்திரங்களாக இருந்தன என்பது அவரின் அபிப்பிராயமாகவும் அமைந்திருந்தது.

சிறந்த கலைப்படைப்புக்களில் ஆர்வம் கொண்ட க.வே. அக்காலத்தில் கொழும்பில் யாழ்ப்பாணத்தவரால் நடத்தப்பட்ட நாடக நிகழ்வுகள் பற்றி மிகவும் கடுமையாகவும், ஏளனமாகவும், வாசகர்களை எச்சரிக்கும் வகையிலும் குறிப்பிட்டுள்ளார்.

> நாடகக் கொம்பனி : "கொழும்பிலே மெஸ். இராசநாயகம்பிள்ளை அவர்களால் நடப்பிக்கப்படும் டிறாமா பிறைஸ் பார்க்கிலும் மெஸ். செல்லையாபிள்ளை டிறாமா

பூந்தோட்டத்திலும், மிக முழக்கமாய் நடைபெற்று வருகிறது. இவ்விரு பாலாரும் இந்தியாவில் இழிபட்டுச் சுழிகெட்டு அழிபட்டுக்கழிபட்ட கூத்தாடிப் பெண்களை அழைத்து அவர்களுக்கு 'விளக்குமாற்றுக்கு வெள்ளிக் குஞ்சம் கட்டினாற் போல'த் தகாத வர்ணப் பெயர்களைச் சூட்டி நவாமணி, சிந்தாமணி, பாலாமணி, தேனாமணி, இராசாமணி, ... புஷ்பகாந்தி, அம்பாள், துரைக்கண்ணு, கமலாம்பாள், ரெத்தினாம்பாள், தொட்டார்பாள், என்னும் நாமங்களைச் சொல்லி மகிழ்ந்து கொண்டாடி மாசாந்தம் ஒவ்வொருவருக்கு இருநூறு, முன்னூறு ரூபா சம்பளம் கொடுத்து வருகின்றனர். ...முன்னொரு முறை கொழும்பிலுள்ள நமது நேசரில் அநேகரை குருடு செவிடாக்கி அனேகரை எமலோகத்துக்கனுப்பி ...அன்பீர் ! சண்முக சுந்தரம் செய்த சாமர்த்தியத்தை யோசித்துப் பாருங்கள். ..."( *சு.நா. 9.1.1903)*

யாழ்ப்பாணத்தில் காலத்திற்குக்காலம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்துகின்றவர்களும் வந்து தமது நிகழ்ச்சிகளைக்காட்டிப் பணம் சம்பாதித்துச் சென்றுள்ளனர். அந்த வகையில் 1907இலும் வந்த் சர்க்கஸ் கொம்பனியினர் வந்து வரவேற்பின்மை காரணமாக திரும்பிச்சென்றனர். இந்நிகழ்ச்சிகள் முற்றவெளியில் நடத்தப்படடிருந்தன என்பதையும்அறிய முடிகிறது. இது பற்றி க.வே பின்வருமாறு எழுதியிருந்தார்.

**உவாறன் சர்க்கஸ் கொம்பனி** :இக்கம்பனியார் முன்போலென்றெண்ணி யாழ்ப்பாணம் வந்து முற்றவெளியில் இரண்டு மூன்று நாள் விளையாட்டு நடத்தியும் தக்க பலனின்மையால் திரும்பிப் போயினர். உணவுக்கு வழியற்றிருக்குமிக்காலத்திலும் நம் பணத்தை வாரிப் போக வந்தார்கள். அவ்வளவிற்றொலைந்தது சந்தோஷம். *(சு.நா.11.03.1907)*

இதே போன்ற சர்க்கஸ் நிகழ்ச்சியொன்று 1911 ஆம்ஆண்டும் இடம் பெற்றது. முற்ற வெளியில் நடந்த இந்தச் சர்க்கஸ் நிகழ்ச்சி தொடர்ந்து பல நாட்கள் நடைபெற்றது. இதனால் பெருமளவு பணம் அவர்களுக்கு வருவாயாகக் கிடைத்தது. இதனைப் பொறுக்காத க.வே.,'**சறுக்கீசு ஆட்டமும், உறுப்பீசு ஓட்டமும்**' எனத் தலைப்பிட்டு எழுதிய பத்திரிகைக் கட்டுரையில், பணம் இவ்வாறு விரயமாகிறதெனவும், யாழ்ப்பாணத்தில நிலவும் பணக்கஷ்டத்தின் மத்தியில் இது அவசியமற்றது எனவும் குறிப்பிட்டிருந்தார். *( சு.நா. 20.03.1911).*

இவை யாழ்ப்பாணத்தவரின் பணம், விரயமாக்கப்பட்டு வெளியே செல்லக் கூடாது என்ற எண்ணத்தையும், உள்ளூரில் வேண்டிய விடயங்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற ஆசிரியரின் விருப்பினையும் காட்டுவதாக அமைகிறது.

## நாளாந்த சமய வாழ்வும் க.வே.யும் சுதேச நாட்டியம் பத்திரிகையும்

சுதேச நாட்டியம் பத்திரிகை சமயங்களைப் பொறுத்தவரையில் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்த அதே வேளையில் மக்களின் சமயவாழ்வு பற்றிய விடயங்களிலும் சர்ச்சைகளிலும், தமது கருத்தைப் பொது நிலைப்பட நின்று கூறியிருந்தது. நல்லூர் கந்த சுவாமி கோயிலில் பலியிடும் வழக்கம் பற்றிய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, அது பின்னர் வழக்குஎன்ற நிலைக்குச்சென்ற போது, சுதேச நாடடியத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

**மானநட்ட வழக்கு:** நல்லூர்க் கந்த சுவாமி கோயில் ஆடு வெட்டப்படும் கோவில் என்றும், அதினாலக்கோவிலைக்கும்பிடுவது தோஷமென்றும் அதிற்செய்யப்பட்ட கும்பாபிஷேகம் தவறென்றும், கும்பாபிஷேகத்தில் குருதெட்சணையாகப் பெற்ற தொகை என்ன என்றும் கனம்.த.கைலாசபிள்ளை என்பவரால் வெளிப்படுத்தப்பட்ட ஒரு துண்டுப்பத்திரத்தை மறுத்துக் கோயிலதிகாரிகளோ யாரோ ஒரு கண்டனமெழுதி வெளிப்படுத்தினர். அக்கண்டனம் பரிகாச வசனங்களாலும், அபவாதங்களாலும் மேற்படி கயிலாசபிள்ளையைத் தாக்கியிருப்பதாயும், அப்பத்திரத்தைக் கோப்பாய் ஸ்ரீ வைரவநாதக் குருக்கள் பரப்பிவிட்டதாயும் அவ்வாறு பரப்பியதால் குருக்கள் தம்மை சங்கையீனஞ் செய்ய முயன்றாரென்றும் குருக்கள் மேற்பிள்ளை மானநட்டவழக்கொன்று தொடுத்தனர்....சட்டமுணர்ந்த விவேகிகளும் யோக்கியருமிருந்தால் வழக்கொன்று தொடுப்பது அருமையான காரியமல்ல. ... சாத்திரந்தெரிந்து பூசிப்பார் சிலர். தெரியாது பண்டை வழக்கத்தைக் கொண்டு பூசிப்பார் பலர். ..."*(சு.நா. 29.09.1902)*

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிதாக ஆலயங்கள் நிர்மானம் செய்வது பற்றி விசனத்துடன், '...ஊர் தோறுங் கோடா கோடி கோயில்கள் திருப்பணிக்குறை உடையனவாயே இருக்க, மேலும் புதுக்கோயில்கள்

கட்டுகிற இந்நாட்டுப் புண்ணிய புருஷர் விவேகம் உங்களிடத்தும் அடுத்ததா?' என ஆதங்கத்துடன் குறிப்பிட்டுள்ளார். *(சு.நா12.09.1904)*

## முடிவுரை:

பத்திரிகை என்பது ஒரு வலுவான ஊடகம். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் பத்திரிகைச்சாதனம், ஏற்படுத்திய தாக்கம் அதிகம். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே ஐரோப்பாவிலும் பத்திரிகைகள் மேலோங்கும் நிலை ஏற்பட்டது. 1910 ஆம்ஆண்டளவிலேயே அங்கும், பத்திரிகை அதன் சகல லட்சணங்களையும் கொண்ட முழுமை நிலையை அடைந்தது. பிரித்தானிய காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் ஐரோப்பிய, அமெரிக்க மிஷனரிமார்களின் மத மாற்ற நடவடிக்கைகளின் பொருட்டுக் கொண்டு வரப்பட்ட அச்சுக் கலையும், பத்திரிகைத்துறையும் மிக விரைவிலேயே, இப்பகுதிகளில் வளர்ச்சி பெறும் நிலை ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கில, அல்லது ஆங்கில- தமிழ்ப் பத்திரிகைகள் மத நோக்கில் ஆரம்பிக்கப்பட்டாலும், சுதேசமொழி அல்லது பிரதேசமொழிப்பத்திரிகைகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ச்சியடைவதைக் காணமுடிகிறது.

அந்த வகையில் சுதேச மொழிப் பத்திரிகைகளின் உருவாக்கமும் வளர்ச்சியும், இப்பகுதிகளில் வாழ்ந்த மக்கட்கூட்டத்தினரின் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சியில் அளப்பெரும் முக்கியத்துவம் கொண்டவையாக அமைந்திருந்தன.

எமது இன்றைய நிலையில் இப்பத்திரிகைகளின் உருவாக்கம் வளர்ச்சி பற்றிய அறிவு, அறிவுப் பெருக்கத்திற்கு உதவுவதாக உள்ளது. இதற்கும் மேலாக இக்கால கட்ட வரலாற்றை அறிய விரும்பும் ஒருவருக்கு, வரலாற்றை அறிய உதவும் கூடியளவு நம்பகத் தன்மை கொண்ட வரலாற்றாதாரமாகவும் அமைகின்றது. மேலைநாட்டு இராஜதந்திர அறிவு கொண்ட அரசஅலுவலர்களாலும், ஆய்வாளர்களாலும், எழுதப்பட்ட அறிக்கைகளிலும், நூல்களிலும், ஆங்கிலம் கற்ற உயர் வகுப்பினரால் எழுதப்பட்ட பத்திரிகைகளிலும் நூல்களிலும் கிடைக்கும் தகவல்களையும், தரவுகளையும் விடச் சிறந்த, நம்பகமான வரலாற்றுத் தகவல்களை இப்பத்திரிகைகள் வாயிலாகப் பெற முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், பிரித்தானிய காலனித்துவம் சமயத்தின் வழி விசுவாசமான பிரஜைகளைப் பெறலாம் என்ற கருத்தைக் கைவிட்டு, 'மக்களின் இயல்பான உணர்வுகளை வளரவிடுவதும், பொதுவான நல்லொழுக்கங்களைப் பின்பற்றச் செய்வதும் போதுமானது' என்ற எண்ணம் காணப்பட்டது. அதன் வழி தாமாகவே தமக்கான தேவைகளையும், பாதையையும் வகுத்துக் கொள்ளட்டும் என அனுமதித்தமையே, சுதேசிகள் தத்தம் மொழி சார்ந்த பத்திரிகைகளை வெளியிடுவதற்கு வாய்ப்பினை வழங்கியிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகிறது. இதனால் தான் சுதேச மொழிப் பத்திரிகைகள் வளர்ச்சி பெற முடிந்தது.

இத்தகைய ஒரு காலகட்டத்தில் உதயம் பெற்ற ***'சுதேச நாட்டியம்'*** பத்திரிகை அதன் பத்திராதிபரான கல்லடி வேலனின் தளராத மன உறுதியினாலும், பத்திரிகை ஊடகம் பற்றி அவர் பெற்றிருந்த விளக்கத்தின் அடிப்படையிலும், 45 ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவரக் கூடியதாக இருந்தது. அவர் யாழ்ப்பாண சமூகத்திற்காக எழுதிய பத்திரிகைகளில் சில விடயங்கள் மாற வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டவராகவும், சில விடயங்களை மாற்றமடையாமல் வைத்திருக்க வேண்டும் என்பதில் கடும் போக்கினைக் கொண்டவராகவும் காணப்படுகின்றார். இது அவரதும், அவர் பத்திரிகையை ஆதரித்தவர்களினதும் மனப்பாங்கினைக் காட்டுவதாகவே கொள்ளலாம். இப்பத்திரிகை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட யாழ்ப்பாணம் பற்றியும், யாழ்ப்பாண மக்கள் பற்றியும் விளங்கிக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அளவு தரவுகளைத் தருவதாயுள்ளது.

## உசாத்துணை நூல்கள், கட்டுரைகள்

**தமிழ் - ஆங்கிலம் நூல், கட்டுரை**


1). இராசநாயகம், செ. முதலியார் (1934?) ***யாழ்ப்பாணச் சரித்திரம்*** - ஆங்கிலேயர் காலம், சிலோன் ஐலன்ட் அச்சியந்திர சாலை, கொழும்பு.

2). வேலுப்பிள்ளை, க. 1918 ***யாழ்ப்பாண வைபவ கௌமுதி***, ஜயஸ்ரீ சாரதா அச்சியந்திர சாலை, வசாவிளான், யாழ்ப்பாணம்.

3). விஜயேந்திரன், 1973 ***ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை***, நயினார் பிரசுரம், மாவிட்டபுரம் (இலங்கை).
4). விஜயேந்திரன் சிலோன், 1978 ***ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை***, காந்தளகம், சென்னை.
5). சிவநேசச்செல்வன்,ஆ. 1977 'இலங்கைத் தமிழ்ப்பத்திரிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் - சிலகுறிப்புகள்', ***நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்சிகள்***, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை, கொழும்பு.பக். 345-347
5). ஜெயசீலன், ஜே.இ.,சுவாமி, 1997, ***யாழ். திருச்சபை வரலாறு***. வளன் அச்சகம், யாழ்ப்பாணம்.
6). வேலுப்பிள்ளை,சி.டி. 1984,***அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்***., (முதற் பதிப்பு 1922), யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
7). Kathiresu, S. 1905.***Hand Book of the Jaffna Peninsula.***, Tellippalai.
8). Prolkar, Anat Kakna **. 1958.** ***The Printing Pressin India: its beginning and early development***, Marathi Samshodha naMandala, Bombay 2.
9). Martin, John.H. 1923*Notes on Jaffna*, Tellipalai.p.194
12). Digby, William, ***Native News Papers in India 1875*****( other details are not available)**
13). மறைமலையடிகள், **1957,*வேளாளர் நாகரிகம்*** 3ஆம் பதிப்பு, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை. ( 1ஆம் பதிப்பு1923, தலைப்பு: ***தமிழர் நாகரிகம் அல்லது வேளாளர் யாவர்?*** , 2ஆம்பதிப்பு 1927, தலைப்பு: ***வேளாளர் நாகரிகம*** )

**பத்திரிகைகள்**

1). குரு சந்திரோதயம் புத். 4, இல.2 25.05.1911
2). இந்து பால போதினி புத்.3, இல. ? 25.01.1910
3). விஜயவட்சுமி ,10.05.1910
4) சுதேசநாட்டியம் **கிடைத்த** பத்திரிகைகள்

| | | | |
|---|---|---|---|
| சு. நாட்டியம் | புத்.1, | சங்கியை 1 | 15.09.1902 |
| சு. நாட்டியம் | புத்.1, | சங்கியை 2 | 29.09.1902 |
| சு. நாட்டியம் | புத்.1, | சங்கியை 9 | 05.01.1903 |
| சு. நாட்டியம் | புத்.2, | சங்கியை 2 | 28.09.1903 |
| சு. நாட்டியம் | புத்.2, | சங்கியை 7 | 21.12.1903 |
| சு. நாட்டியம் | புத்.2, | சங்கியை 14 | 30.05.1904 |
| சு. நாட்டியம் | புத்.2, | சங்கியை 19 | 08.08.1904 |
| சு .நாட்டியம் | புத். | சங்கியை 9 | 23.01.1905 |
| சு. நாட்டியம் | புத். 3 | சங்கியை 9 | 23.01.1905 |
| சு. நாட்டியம் | புத். 5 | சங்கியை 10 | 11.03.1907 |
| சு. நாட்டியம் | புத். 6 | சங்கியை 15 | 01.06.1908 |
| சு. நாட்டியம் | புத். 7 | சங்கியை 19, | 07.06.1909 |
| சு. நாட்டியம் | புத். 7 | சங்கியை 18, | 12.07.1909 |
| சு. நாட்டியம் | புத்.8, | சங்கியை 18, | 27.06.1910 |
| சு. நாட்டியம் | புத்.8, | சங்கியை 20, | 08.08.1910 |
| சு. நாட்டியம் | புத்.10, | சங்கியை 8, | 18.12.1911 |
| சு. நாட்டியம் | மலர் 31, | இதழ் 4, | 16.11.1932 |
| சு. நாட்டியம் | மலர் 33, | இதழ் 7, | 31.01.1935 |